Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

## வெள்ளிநாதம் Weekly


விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2034 07 – 13 பெப்ரவரி 2003 ஓசை 354



"விடுதலைப் புலிகளின் உறுதி மொழியையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்"

– கரோல் பொலமி



## விண்வெளி மரணங்கள்



## சுதந்திரத்தின் விலை ...?

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 07 .02.2003

# அழுவதற்குப்பதிலாக...

கடந்த செவ்வாயன்று இலங்கை தனது ஐம்பத்து ஐந்தாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நாட்டு மக்களுக்கு நாட்டின் தலைவியென்ற முறையிலும் சனாதிபதி என்ற முறையிலும் சுதந்திரதின உரையாற்றியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஒருமுறை சுதந்திர தின உரையின் போது அழுது கண்ணீர் வடித்தார். இம்முறை அழுது கண்ணீர் வடிக்கவில்லை. ஆனால் அழுவதற்குப் பதிலாக ஆக்ரோசப்பட்டுள்ளார் அவ்வளவு தான். இந்த முறை சுந்திரதின உரையில் உள்ள வித்தியாசம்.

கடந்த சில காலமாக சனாதிபதி சந்திரிகா தான் நாட்டின் தலைவி என்பதை மறந்து விட்டு அல்லது தலைவி என்ற இறுமாப்பில் பேசுவதும் வழக்கமாகவுள்ளது.

இம்முறை சுதந்திரதின உரையில் சனாதிபதி சந்திரிகா "நாட்டின் இறைமை, ஐக்கியம், மக்களின் பாதுகாப்பு, சமசந் தர்ப்பம், சுயகௌரவம் ஆகியவற்றை பாதுகாத்து உறுதி செய்வதற்கு அரசமைப்புச்சட்டம் எனக்குத் தந்துள்ள அதிகாரத்தை பயன் படுத்தி எதையும் செய்வேன்" என ஒரு வகையான மிரட்டலை விடுத்துள்ளார்.

அதாவது பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையினை என்னால் குழப்ப முடியும் அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்க முடியும் என்பதே அவரின் சுதந்திரதின உரையில் உள்ள மிரட்டலாகும்.

இன்னொரு வகையில் கூறுவதானால் நாட்டுமக்களிற்கு சுதந்திரதின உரையாற்றினார் என்பதை விட ஐக்கியதேசியமுன்னணி அரசிற்கான சுதந்திரதின எச்சரிக்கையை விடுத்துள் ளார் என்றே கூறலாம்.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான அரசே நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் மக்களின் பாதுகாப்பையும் சமசந்தர்ப்பம் என்பவற்றையும் பாதுகாக்கத் தவறிய அரசுகளில் ஒன்று என்பதோடு சனாதிபதி என்ற வகையில் பாதுகாக்கத் தவறிய தலைவிகளில் ஒருவருமாவார்.

தமிழ்மக்களிடமிருந்து பறித்த/ வழங்கமறுத்த உரிமைகள் தொடர்பாக நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த் தையினை பூதாகாரமாக்குவதும் அதனைச் சாட்டாகக் கொண்டு சுய அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முனைவதையுமே இது தெளிவுபடுத் துகிறது.

தமிழ்மக்களை இந்த நாட்டின் குடிமக்களாக நடத்தத்தவறியதன் விளைவாகவே இலங்கையை பெரும் அவலங்களைச் சந்திக்கும் நிலை வரை கொண்டு சென்றது.

சனாதிபதி சந்திரிகா கூறும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரம் தனித்து சிங்கள மக்களை மட்டும் பாதுகாப்பதற்காக வழங்கப்பட் டுள்ளதல்ல.

மாறாக இலங்கையின் பிரசைகள் என்றவகையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என அனைத்து இனங் களையும் பாதுகாப்பதற்கே வழங்கப்பட் டுள்ளது.

ஐம்பத்தந்தாவது சுதந்திரதினக் கொண்டாட்டமானது வழமையை விட மிக அமைதியான முறையில் நடை பெற்றுள்ளது இதற்குக் காரணமாக எவை இருந்தன என்பதை ஆக்கபூர் வமான முறையில் சிந்தித்து செயலாற் றுவதே இந்நாட்டின் இறைமைக்கும் ஐக்கியத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும்.

ஆனால் இலங்கையின் சனா திபதி சந்திரிகாவிடமிருந்து ஆக்க பூர்வமான சிந்தனையையோ அல்லது செயலையோ எதிர்பார்க்க முடியாது.


அவர் கடந்த காலங்களில் அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வாறு எதனையும் செய்யவும் இல்லை.

ஒட்டு மொத்தத்தில் சனாதிபதி சந்திரிகாவின் இம் முறைக்கான சுதந்திரதின உரையில்நாட்டுமக்களுக்குப் பரிசாக எதனையும் வழங்கவில்லை. அதற்கு பதிலாக அவர் வழங்கிய தெல்லாம் அதிகார மிரட்டலை மட்டுமே யாகும்.

சிங்கள மக்களிற்கே சுதந்திர தின பரிசாக மிரட்டலை வழங்கியுள்ள ஒரு தலைவியிடமிருந்து தமிழ் மக்கள் எதனையும் எதிர்பார்க்கவும் மாட்டார்கள் எதிர்பார்க்கவும் இல்லை.

இதனையே சுதந்திரதினமான கடந்த செவ்வாயன்று தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு பிரதேசம் எங்கும் கறுப்புத்தினமாக பிரகடனம் செய்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அந்த வகையில் தமிழ் மக்கள் கருத்தில் எடுக்காத இந்த சுதந்திர தினத்தின் போதும் சனாதிபதி சந்திரிகா அழுது கண்ணீர் வடிப்பதற்குப் பதிலாக ஆக்ரோசப்பட்டுள்ளார் என்றுமட்டுமே கூறலாம்.




# “பெலாமி”யின் பாராட்டும் பேரினவாதிகளின் தோல்வியும்

கடந்த வாரம் யுனிசெப் நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப் பாளர் கரோல் பெலாமி வன்னிப் பகுதிக்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்



அவர்களைச் சந்தித்துச் சென்றார்.

பெலாமி அவர்களின் நான்கு நாள் விஜயத்தின் பின்னர் தனது விஜயம் குறித்து கொழும்பில் வைத்து ஊடகங் களிற்கு அவர் வழங்கிய செவ்வியின் போது சமாதான விரேத சக்திகள் புலிகளிற்கு எதிராக வைத்திருந்த கடைசிப் பிரச்சார அஸ்திரத்தையும் நிர்மூலமாக்கி விட்டுள்ளார்.

அரசிற்கும் புலிகளிற்கும் இடையில் தீவிர யுத்தம் நடை பெற்ற போதும் பின்னர் அரசிற்கும் புலிகளிற்கு மிடையிலான சமாதமானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை யிலும் புலிகள் மீது களங்கத்தை ஏற்படுத் தும் வகையில் புலிகள் சிறுவர்களை போரில் ஈடுபடுத்தி வருகின்றனர் என உரத்து முழக்கமிட்டு வந்தனர் ஆனால் புலிகளோ முன்பு வன்னிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்து சென்ற ஐ.நா செயலாளரின் விசேட தூதுவரான ஒலரா ஒட்டுண்ணு அவர்களிற்கு வழங்கிய வாக்குறுதிகளின் படி பதினெட்டு வயதிற்கு குறைந்த சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்து வதில்லை என்ற வாக்குறுதியினை நிறைவேற்றி வந்தனர்.


இதன்வெளிப்பாடுகளாக புலிகள் வன்னி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை என தமது அரசியல் செயலகங்களில் வைத்து புலிகளுடன் இணைவதற்காக வந்த

**வேழினி**

சிறுவர்களை பெற்றோர்களிடம் ஒப்ப டைத்த வண்ணமிருந்தனர்.

இவ்வாறு புலிகளால் முந்நூற்று ஐம்பது வரையான சிறுவர்கள் மீள பெற்றோர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்கள் என பெலாமியிடமும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித் திருந்தார்.

அத்தோடு புலிகள் வன்னியில் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த சிறுவர்களின் நலன் களை பேணும் வகையில் பல் வேறு வேலைத்திட் டங்களை செயற் படுத்தியும் வரு கின்றனர்.



போரினால் உடல் மற்றும் உள ரீதியாகப் பாதிக் கப்பட்ட பல நூற் றுக் கணக்கான சிறுவர்களின் மேம் பாட்டிலும் விசேட கவனத்தை செலுத்திச் வந்துள்ளனர்.


புலிகள் தாம் நேரடியாகவும் மற்றும் உள்ளூரில் இயங்குகின்ற தொண்டர் நிறுவனங்களிற்கூடாகவும் சிறுவர் நலத்திட்டங்களை மேற்கொள்ளவும் வழிவகுத்தனர்.

ஆனால் இவையாவற்றையும் மறைத்து மிக நீண்ட காலம் போர் நடைபெறுவதற்கு காரணமாகவிருந்த சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லகஸ்மன் கதிர் காமரும் ஆதாரமற்ற புலிகளிற்கெதிரான விசமத்தனமான பொய்ப் பிரச்சாரங்களை

(15ம் பக்கம் பார்க்க...)

இன்பக் கண்ணீர் , முதல்தர முத்து; இரங்கல் கண்ணீர் இரண்டாந்தர முத்துத்தான். –ஜீன்பால் ரிஷ்ட்டர்.

# பிரமுக அறிமுகம்



## இவர்தான் நம்பியார்

நம்பியார் என்ற பெயரைக் கேட்டவுடன் நினைவுக்கு வருவது ஒரு காலத்திய தமிழ்ப்பட உலகத்தின் வில்லன் நடிகரான M.N.நம்பியாரின் உருவமேயாகும். அவரின் உருட்டும் விழியும் மிரட்டும் மொழியும் பார்வையாளர்களை கதிகலங்க வைக்கும்....

திரைப்படங்களில் வில்லனாக வந்தாலும் நிஜவாழ்வில் மிகவும் நல்ல மனிதர் என்று கூறப்படுபவர்.

கடந்த சில வாரங்களாக மற்றொரு நம்பியாரின் பெயரும் எமது மக்களிடையே பெரும் பரபரப்புடன் அடிபடும் பெயராக உள்ளது.

இவர் வில்லனா-கதாநாயகனா என்பது இன்னும் சில நாட்களில் முழுமையாகத் தெரிந்துவிடும். தற்போதைக்குத் தமிழ் மக்களின் மதிப்பீட்டில் வில்லத்தனம். புரியக் கூடும் என அஞ்சப்படும் ஒரு முக்கிய கதையின் நாயகன் என்று மட்டும் கூறமுடியும்.

இரு நம்பியார்களுக்கும் உள்ள ஒற்றுமைகள் இரண்டு. அவர் இராணுவ அதிகாரியாக நடித்தவர். இவர் நிஜ இராணுவ அதிகாரி. இருவருமே இந்தியர்கள். அவ்வளவுதான்.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு தீர்வுகாண அதனை ஆய்வு செய்து ஆலோசனை செய்ய அழைக்கப்பட்ட நம்பியார் ஓய்வு பெற்ற இந்திய இராணுவ பிரதித்தலைமை அதிகாரி ஆவார். சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் என்றால் இவர் லெப்ரினன்ட் ஜெனரல் அவ்வளவுதான்... இராணுவ நோக்கில் அவரைவிடவும் இவர் இன்னும் கொஞ்சம் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை இராணுவத் தனமாகவே பார்ப்பார் என்றே நம்பலாம்... இருவருமே 'விடுதலைப்புலிகளிடம் சூடு கண்ட அனுபவக்கொதிப்புடன் கூடிய இராணுவத் தரப்புகளைச் சேர்ந்தவர்கள். எனவே உயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினையை அதிஉயர் இராணுவ நோக்கில் - இராணுவத்தினரின் சார்பிலேயே இவர் பார்ப்பார் என்றே நம்பலாம்.

+++

63 வயதான இந்த அனுபவம் வாய்ந்த இந்திய இராணுவத்தின் ஓய்வு பெற்ற அதிகாரி நம்பியார் 'மும்பை' யில் பிறந்தவர். 1960 களில் ஆரம்பத்தில இராணுவத்தில் இணைந்தவர். கேரள நாயர் குடும்பத்தைச் சேர்ந்த இவரது தாய்மொழி மலையாளம். 'மும்பை' யில் உள்ள 'புனே' யில் படித்தவர் 'இந்திய இராணுவக்கல்லூயில் படிப்பும் பயிற்சியும் பெற்ற இவர் 15.12.1967 இல் மாரத்தா இலகு காலாட்படையின் 20வது பட்டாலியனில் பணிப்பொறுப்பினை ஏற்றார்.

இந்தியாவின் வடமேற்கு - வட-கிழக்கு போர் பிரதேசங்களில் இராணுவத்தளங்களில் தீவிரமாக இயங்கினார்.

1965 -1971 காலப்பகுதியில் கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

அவுஸ்ரேலிய இராணுவக் கல்லூரியில் பயின்று பட்டதாரியான இவர் இந்திய இராணுவ பிராந்திய தலைமையகங்களில் பொது அதிகாரிகள் பிரிவில் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும், இராணுவத்தலைமையகத்தின் இராணுவ நடவடிக்கைளுக்கான பணிப்பாளர் நாயகமாகவும் உயர் பொறுப்புக்களை வகித்தவர்.

1991இல் புதுடில்லியிலும் அதே ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இஸ்லாமாபத்திலும் நடைபெற்ற பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்களின் போது இந்தியத்தரப்புத் தூதுக்குழுவுக்கு தலைமைதாங்கியவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புத்தொடர்பானகற்கை நெறிகளில் முதுமாணிப்பட்டம் (Masters degree) பெற்ற நம்பியார் ஓய்வு பெறும்வரை தேசிய பாதுகாப்பு விவகாரங்கள்,சர்வதேசத் தொடர்புகள், ஐ.நா அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான பகுப்பாய்வுக் கற்கை செயற்பாடுகள் போன்றவற்றில் ஓயாது உழைத்தவர் .

இந்திய தேசியப் பாதுகாப்புக் கல்லூரி, பாதுகாப்பு சேவைகள் அதிகாரிகள் கல்லூரி, வெளியுறவுச் சேவைகள் மையம், ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் மற்றும் இராணுவ யுத்தக்கல்லூரி ஆகியவற்றின் விரிவுரையாளராக பணியாற்றி வருபவர்.

இந்திய இராணுவத்தின் முதல்-இயந்திரச் சாதனங்கள் மயமான படையணிப் பிரிவை (Mechanised Brigade Group) உருவாக்கி பின் இதன் இயந்திர சாதனப்பிரிவின் தளபதியாகவும் இருந்தவர்.

முன்னாள் யூக்கோஸ்லாவியாவில் நிலைகொண்டிருந்த ஐ.நா படையின் முதல் தளபதியாக- இந்திய அரசின் சார்பில் -பிரதிநிதித்துவம் செய்தவர்.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் துணையாளராகவும் பணியாற்றியவர்.

இந்திய இராணுவ தலைமை அதிகாரியாக இருந்து 1994இல் ஓய்வு பெற்ற இவரின் சேவை நலன்பாராட்டி 'வீரசக்கர' விருது, அரிவிஷிஸ்ற் பதக்கம், பரம்விஷிஸ்ற் சேவா பதக்கம் போன்றவை வழங்கப்பட்டன.

இவரது மகன் இந்திய இராணுவத்தில் பணிப்பொறுப்புள்ள அதிகரியாகஉள்ளார். அதுவும் இவரது அதே இருபதாவது மாரத்த இலகு காலாற்படையிலேயே மகனும் பணியாற்றுகிறார்.

ஆகவே இராணுவ நோக்கும், இராணுவ சிந்தனையும், இராணுவ விசுவாசமும் ,இராணு செயற்பாடுமே இரத்தத்தில் ஊறியுள்ள நம்பியார், இந்திய இராணுவ நலனுக்கு மாறாக இலங்கை இராணுவத்திற்கு முரணாக,ஈழத்தமிழ்மக்களுக்கு அவர்களின் வாழ்வியல் அரசியல் உரிமைகளுக்கு நன்மைதரும் வகையில் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் செயற்படுவாரா என்பது சந்தேகம்தான். முதலில் அவர் ஒரு இந்தியர்.

அடுத்தது அவர் ஒரு இராணுவ சிந்தனையாளர்.

மூன்றாவது அவர் இலங்கை அரசின் நம்பிக்கைக்குரியவர்.

கடைசியாக அவர் விடுதலைப்புலிகளை தடை செய்துள்ள ஒரு நாட்டின் பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்டவர். இந்த நிலையில் தமிழ் மக்கள் நம்பியாரை நம்பலாமா?

விதூஷகன்

# சுதந்திரத்தின் விலை

கடந்த செவ்வாயன்று சிறிலங்கா தனது 55ஆவது சுதந் திர தினத்தைக் கொண்டாடியது.

கடந்த இரு தசாப்த காலத்துள் சிங்களவர்கள் ஒப்பீட்டளவில் சுதந் திரமாகக் கொண்டாடிய சுதந்திர தினம் இது.

நிகழும் சமாதான முயற்சிகளினா லேயே இது சாத்தியமாகியது.

இது ஒன்றைக்காட்டுகிறது

தமிழர்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றால் சிங்களவர்களுக் கும் சுதந்திரம் இல்லை என்பதே அது.

இதை இன்னும் சரியாகச் சொன் னால்- இலங்கைத் தீவின் சுதந்திரம் எனப்படுவது சிங்களவர்களும் தகவல் பேரரசின் தலைநகர் மீதான தாக்குதல் ஆப்கானில் பழங் கால குகை ஒன்றினுள் வைத்து திட்டமிடப்படும் ஒரு நிலை தோன் றியது இதனால்தான்.

கடந்த 55 ஆண்டுகால கொழும்பு மைய அரசியலில், பெற்ற சுதந் திரத்தை தமிழர்களோடு சேர்ந்து பகிரத் தயாராய் இல்லாத சிங்கள வர்கள் தாமும் சுதந்திரமிழந்து போனார்கள்.

இப்பொழுது தீவின் வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதி களில் சிறிலங்காவின் இறைமை எனப்படுவது செல்லுபடியாகாது.

மற்றது - தமிழர்களைத் தோற் தும் நாடுதான்.

இந்தப் பிராந்தியத்திலேயே அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட நாடு என்று கூறப்பட்ட ஒரு நாடு

இந்தப் பிராந்தியத்திலேயே கல்விகற்றோர் விகிதம் அதிகமு டைய ஒரு நாடு இன்று கூறப்பட்ட ஒரு நாடு

இந்தப் பிராந்தியத்திலேயே முத லில் இன்றநெற் இணைப்பைப் பெற் றநாடு என்று கூறப்பட்ட ஒரு நாடு.

இன்று தனது பிரச்சினை களுக்கு தீர்வைத்தேடி உலகுபூரா கவும் போகிறது. உலகுபூராகவும் ஆலோசனை கேட்கிறது.

வெளியாட்கள் வந்து விலக் குப் பிடிக்கும் ஒரு நிலையில் உள்ள ஒரு நாடு தன்னை சுதந்தி

தமிழர்களும் முஸ்லிம்களும் பரஸ் பரம் பகிர்ந்துகொள்ளும் ஒன்றே எனலாம்.

ஆனால் கடந்த 55 ஆண்டுகால கொழும்புமைய அரசி யலில் இதற்குத் தயாராய் இல் லாத சிங்களத் தலைவர்கள் தீவு க்கு வெளியிலிருந்து உதவிகளைப் பெற்று தமிழர்களை தோற்கடிப் பது குறித்தே சிந்தித்து வந்துள்ளார் கள்.

இது இலங்கைபெற்ற சுதந்திரத் தின் கருவிலேயே காணப்பட்ட ஒரு நோய்க்கூறு என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியில் இலங்கைத் தீவுக்கு போராடாமலேயே சுதந்திரம் கிடைத் தது.

இது பற்றி ஒரு மூத்த யாழ்ப்பா ணத்தவர் பின்வருமாறு கூறினார். ''வீடு விற்கும்போது கக்கூசும் சேர்ந்து விற்கப்படுவது போல இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங் கப்பட்டபோது இலங்கைத்தீவுக்கும் அது கொடுக்கப்பட்டது என்று.

வலியுணராமல் பெறப்பட்ட சுதந்திரம் இது என்பதால் சிங்கள வர்கள் அதன் மெய்யான பெறும தியை ஒரு போதும் உணர்ந்ததா கத் தெரியவில்லை.

சுதந்திரம் எனப்படுவது அதன் மெய்யான அர்த்தத்தில் மற்றவர் களோடு சேர்ந்து பகிரப்படும் ஒன்றே.

மற்றவர்களோடு சேர்ந்து பகிரப் படாத எதையும் சுதந்திரம் என்று கூறமுடியாது.

சுதந்திரத்தை மற்றவர்களோடு சேர்ந்து பகிரத்தயாராய் இல்லாத ஒரு தனி நபரோ அல்லது ஒரு நாடோ ஒருபோதும் சுதந்திரமாக இருக்க முடியாது.

பகிரப்படும் அளவு குறையக் குறைய சுதந்திரத்தின் மகிமையும் குறைந்து கொண்டே போகிறது.

பிறருடைய சுதந்திரத்தை மதி யாத ஒருவர் ஒருபோதும் சுதந்திர மாக இருக்க முடியாது.

ஏனைய நாடுகளின் சுதந்திரத்தை மறுக்கும் ஒரு நாடு அல்லது ஒரு இனம் ஒருபோதும் சுதந்திரமான நாடாக அல்லது சுதந்திரமான இன மாக இருக்க முடியாது.


மற்றவர்களுடைய சுதந்திரத்தை மதிக்கும் அளவே ஒருவர் தன்ன ளவில் அனுபவிக்கும் சுதந்திரத்தின் அளவுமாகும்.

மற்றவர்களின் சுதந்திரத்தை மறுக்கும் ஒருநபர் சுதந்திரம் மறுக் கப்பட்டவர்களின் தாக்குதல்களிலி ருந்து சதாதன்னை தற்காத்துக் கொள்ள வேண்டியவராய் இருக் கிறார். இதனால் அவரும் யதார்த் தத்தில் சுதந்திரமிழந்துவிடுகிறார்.

இது நாடுகளுக்கும் பொருந்தும். இனங்களுக்கும் பொருந்தும்.

பலஸ்தீனர்களின் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளாத வரை இஸ்ரேல் சுதந்திரமாக இருக்க முடியாது.

ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு மெய்யான சுதந்திரத்தை அனும திக்காதவரை அமெரிக்கா சுதந்திர மாக இருக்கமுடியாது.



கடிப்பதற்காக தீவுக்கு வெளியிலி ருந்து உதவிகைளைப் பெறமுய லும் சிங்களவர்கள் ஒன்றில் நாட் டின் வளங்களை அந்நியரிடம் விற் கிறார்கள்அல்லது நாட்டை பேரரசு கள் வரையறையின்றிச் சூறை யபடுமாறு திறந்துவிடுகிறார்கள்.

இலங்கைத்தீவின் இயற்கைத் துறைமுகங்களுக்கு மிக அருகில் உள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு வ்றிகப்படவுள்ளன.

**நிலாந்தன்**

தீவின் ஆழ்கடல் பரப்பு யப்பான்,சீனாபோன்ற நாடுகளிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.

எப்பாவலவில் இருந்த சர்ச்சைக்குரிய பொஸ்பேற் படிவுகள் முன்பு அமெரிக்காவுக்கு விற்கப் பட இருந்தன. ஆனால் அவை பின் னர் யாருடைய கவனத்தையும் ஈர்க்காத விதத்தில் யப்பானுக்கு விற்கப்பட்டு விட்டன.

சமீபத்தில் மாவின் விலையும் பாணின் விலையும் ஏறியபோது அது குறித்து பிறிமா ஆலை மீது செல்வாக்குச் செலுத்தமுடியாத ஒரு வித கையறு நிலையிலேயே ரணிலின் அரசு இருந்தது.

தனது பெண்கள் அரபுநாடுகளில் வேட்டையாடப்படுவது கண்டும் எதையும் செய்ய முடியாத அல்லது செய்ய விரும்பாத அளவுக்கு பல வீனமாயிருக்கும் ஒரு நாடு தன் னைச் சுதந்திரமானது என்று எப்ப டிக் கூறமுடியும்.

உலகிலேயே அதிகம் குடி காரர்களை உடைய நாடு சிறிலங் காவே.

உலகிலேயே தற்கொலை விகிதம் மிக உயர்வாய் உள்ள நாடு சிறிலங்காவே.

உலகிலேயே அதிகம் தப்பியோடிகளை உடைய இராணு வத்தை வைத்திருக்கும் நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று.

இதெல்லாம் 55 ஆண்டுகால சுதந்திரத்தை தமிழர்களோடு சேர் ந்து பகிரத்தயாராக இல்லாததற் காக சிங்களவர்கள் கொடுத்த விலை.

முன்பு யுத்தம்செய்யக் கடன் வாங்கினார்கள். இப்பொழுது சமா தானம் செய்யக் கடன் கேட்கிறார் கள்.எப்படிப் பார்த்தாலும் சிறிலங்கா ஒரு கடனாளி நாடுதான். கையேந் ரமானது என்று எப்படிக் கூறுமு டியும்?

சுமார் அரைநூற்றாண்டுக்கு முன்பு சான்பிராஸ்சிஸ்கோவில் நடந்த ஒரு மாநாட்டில் முன்னாள் சனாதிபதி ஜெயவர்த்தன யப்பா னுக்காக பரிந்து பேசினார். அது யப்பான் இரண்டாம் உலகமகாயுத் தத்தின் அழிவுகளிலிருந்து மீண் டெழுந்திராத ஒரு காலம். அப் பொழுது சிறிலங்கா புதிதாகச்சுதந் திரம் பெற்ற ஒரு நாடு.

அன்று ஜே.ஆர் செய்த உத வியை யப்பான் பிறகெப்பொழு துமே மறக்கவில்லை. இன்று இலங் கைக்கு அதிகம் உதவும் நாடாக அது காணப்படுகிறது.

தற்சமயம் சமாதான முயற் சிகளில் நிதி ரீதியிலான அனுசர ணையாளராக யப்பான் காணப்படுகி றது.

அன்றைக்கு சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு உலகுக்குப் போதனை செய்தார் ஜெயவர்த்தன.

இன்றைக்கு அவருடைய மரும கனின் ஆட்சிக்காலத்தில் அவரு டைய நாடு யப்பானிடம் கடன் வாங்கி சமாதானம் செய்யும் ஒரு நிலை.

55 ஆண்டுகால சுதந்திரத்தை அதன் அருமைதெரியாது போட்டு டைத்ததன் விளைவு இது.

தமிழர்களைத் தோற்கடிக்க முயன்றபோதெல்லாம் சிங்களவர் கள் தமது சுதந்திரத்தை இழந்தி ழந்து வந்திருக்கிறார்கள் என்பதே இலங்கைத் தீவின் அரசியல் வரலாறு.

இதிலிருந்து இனியாவது குறைந் தது இந்த சமாதான காலத்திலா வது சிங்களவர்கள் சிந்தித்தாக வேண்டும்.

குருதி சிந்தாமல் பெற்ற சுதந் திரத்தை பாதுகாக்கத்தெரியாத நாடு தனது வல்லமைக்கு மீறி குருதி சிந்தியிருக்கிறது.

சுதந்திரத்தை மற்றவர்களோடு பகிரத் தயாராக இல்லாததற்காக கொடுத்த் மிகப்பெரிய விலை இது.

சுதந்திரத்தின் பெறுமதியை உணர இந்த விலை போதும்.

சுதந்திரமான இனங்களுக் கிடையில் இச்சிறுதீவைப் பங்கிடு வதற்கு சிங்களவர்கள் தயாராக வேண்டும்.

இல்லையென்றால் - இனியுமொரு யுத்தம் வெடித்தால் முழு இலங் கைத்தீவுமே பலிபீடமாய் மாறும் ஒரு நிலை வந்தாலும் வரலாம்.



# விண்வெளி மரணங்கள்


***அமெரிக்காவின்*** கொலம்பியா விண்ஓடம் வானில்வெடித்துச் சிதறியது விண்வெளி மனித பயண முன்னேற்றத்தில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தப்போகிறது. விண்வெளியில் விண்வெளிப்பயணத்தில்



1986இல் வெடித்துச் சிதறிய சலஞ்சர் விண் ணோடத்தில் பலியாகிய ஏழு விண்வெளி வீரர்கள்

மரணம் நிகழ்ந்தது இது முதற்தடவை யல்ல. மனித விண்பயணம் ஆரம்பமான 1960களிலேயே இந்த மரணங்கள் சம்ப விக்கத் தொடங்கி விட்டன. ஆனால் இந்த மரணங்கள் அதிகமாக இல்லை. மிகமிக அரிதாகவே நிகழ்ந்திருக்கின்றன. விண் பயணங்கள் மிகவும் பாதுகாப்பு உறுதிப்ப டுத்தப்பட்டே மேற்கொள்வதால் மரணங்க ளுக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. இவற் றையும் மீறி இதுவரை 5விண்வெளிப்பயண மரணங்கள் சம்பவித்தி ருக்கின்றன.

1967 ஏப்பிரல் 23 இல் முதல் விண்பயண மரணம் நிகழ்ந்தது. சோவியத்தின் 3ம் தலைமுறை விண் கலமான சோயுஸ்-1 ன் முதல் பறப்பின் போது இந்த மரணம் நிகழ்ந்தது. சோயுஸ்-1 -விண்கலம் புறப்பட்டு 18 தடவைகள் பூமியை வலம்வந்த பின்னர் தரையிறக்கம் நிகழ்ந்தது. தரையிறக்கத்தின் போது வேகத்தை குறைத்து பூமியில் மெதுவாக விண்கலம் தரையிறங்க உதவும் பரசூட் (வான்குடை) விரியாத காரணத்தால் சோயுஸ் விண்கலம் பூமியின் ஈர்ப்பின் கீழ் மிக வேகமாக இறங்கி மோதி உடைந்தது. இதன்போது சோயுஸ் -1 ல் பயணித்த விளாடிமீர் கோமோரோவ (viladimir Komonov) என்ற சோவியத் விண்வெளி வீரர் உயிர் நீத்தார். சோமோ ரோவ்விற்கு இந்த மரணப்பயணம் இரண் டாவதாகும். இதற்குமுன் இரு சக சோவி யத் வீரர்களுடன் 1964இல் வொஸ்-கோட்-1 விண்கலம் மூலம் பூமியை 16 தடவைகள் சுற்றி பத்திரமாக கோமோரோவ் பூமிக்குத் திருமபினார். 3 ஆண்டுகளின் பின்னரான 2ம் பயணம் கோமோரோவின் உயிரை பலி





வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்ணோடத்தின் சிதறல்கள் அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலப் பகுதிகள் மீது பரவி விழும் ராடர் படம்.

யெடுத்தது.

ஆனால் இதற்கு முன்னரும் விண்வெளிப் பயணத்துக்கான மரணம் சம்பவித்தது. அதுதரையில் புறப்பாடுக ளுக்கு முன்னர் நிகழ்ந்தது.

சந்திரனுக்கு மனிதரை தரையிறக்க அமெரிக்காவின் நாஸா மேற்கொண்ட ஆயத்த நடவடிக்கைகளின் போது அப்பொலோ -1 விண்கலம் தரையில் வைத்து பயிற்சிலீடுபடுத்தப் பட்டுக் கொண்டிருக்கையில் கலத்தில் ஏற்பட்ட விபத்தால் கலம் தீக்கிரையாகியது. அப் போது அப்பொலோ-1இல் இருந்த வேர்ஜில் கிறிஜெஸ் எட்வேட் வைற், ரோஜர் சா∴(க)பி ஆகியோர் உயிரிழந்தனர். இந்த விபத்தால் சந்திரனில் மனித தரையிறக்கப்பயணம் 1969 யூலை வரை தாமதமானது.

ஆனால் கோமோராவின் பலியின் பின்னரும் சோவியத் தின் மனித பயணங்கள் தாமத மின்றித் தொடர்ந்தன.

ஆயினும் சோவியத் மிக அண்மையாகவே அடுத்த உயிர்ப் பலியைச் சந்தித்தது. அது விண்வெளி யிலிருந்து கலம் பூமிக்குத் தரையிறங்கி யவேளை சம்பவித்தது. விண்கலம் வெடித்துச் சிதறியது போன்ற எதுவும் இதில் நிகழவில்லை. 1971இல் இந்த விபத்து நிகழ்ந்தது. சோவியத்யூனியன் உலகின் முதலாவது விண்வெளியின் நிரந்தர விண்ணில்லமான சல்யூட்-1ஐ கட்டமைத்திருந்தது. இது பூமியை விண்வெளி யிலிருந்து வலம்வந்து கொண்டிருந்தது.

சோயுஸ்-11விண்கலம் மூலம் சோவியத் விண்வெளி வீரர்களான ஜீஜோர்ஜிவு. டோப்ரோ வோல்ஸ் (Georyi T.Dobroul skov) விளாடிஸ்லாவ் N.வோல்கோவ் (viladis lav.n.volskov) விக்டர் I- பற்ஸாயெவ் ஆகிய மூவரும் சல்யூட்-1 விண்கலத்துக்கு அனுப் பப்பட்டனர். சல்யூட்-1 இல் இவர்கள் 596.4 மணிநேரம் தங்கியி ருந்து -பூமியை 360 தடவைகள் வலம்வந்தனர். விண்ணில்லத் தங்கலை முடிவுசெய்த அவர்கள் சோயுஸ்-11 மூலம் பூமிக்குத் திரும்பினர். பூமியில் பத்திரமாகக் கலம் தரையிறங்கியது.


தரையில் கலத்தை நெருங்கிய சோவி யத்தின் விண் ஆய்வுப் பணியினர் கலத்தின் கதவைத்திறந்தபோது அதனுள் 3 வீரர்களும் இறந்துகிடக்கக் காணப்பட் டனர். விண்கலத்தில் இருந்த வளி மற்றும் வளிமண்டல அமுக்கம் கலத்தைவிட்டு வெளியேறியதால் இந்த மரணம் சம்பவித் தது.

சோவியத்தின் விண்வெளி மரணங்கள் சோயுஸ் -11 உடன் முடிவடைந்து விட்டது. அதன்பின் இதுவரை சோவியத் விண்வெளி மரணங்கள் எவையும் நிகழவில்லை.

இதன்பின் அமெரிக காவின் கலம் 1970ல் அமெரிக்காவின் அப் பொலோ-13 மூன்று விண்வெளிவீரர்களுடன் சந்திரனை நோக்கிப் பய ணித்தது. 2 வீரர்களை சந்திரனில் இறக்க இப் பயணம் மேற்கொள்ளப் பட்டது. விண்கலத்தில் ஒக்சிஜன் கலன் வெடித்ததால் இப்பயணம் அவலப்பட்டு சந்திரனை வலம்வந்து மிகநெருக் கடியாக பூமியில் தரையிறங்கியதுடன் முடிவடைந்தது. இதன்பின் அமெிக்கா விண்ணில் நிறுவிய 'ஸ்கைலாவ்' விண்ணில்லத்தில் பலவிபத்துக்கள் சம்ப வித்த போதும் மரணங்கள் ஏதும் சம்பவிக்கவில்லை.

1979 இல் அமெரிக்காவின் நாஸா விமானங்களை ஒத்த 'விண்ஓடங்கள்' (Shuttle) விண்கலங்களைக் கட்டி அதன் வழியாகப் பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கியது. முதலாவது விண்ணோடம் கொலம்பியா. அதன் முதல் பயணம் 1979ம் ஆண்டு நிகழ்ந்தது.

இந்த விண்ணோட வடிவம் இதுதான். பிரதான எரிபொருள்தாங்கி கறுப்பு நிறத்தில் நடுவே இருக்கும் அதன் இருபுறமும் நீண்ட ரொக்கட்டுகள் இருக்கும். பிரதான எரிபொருள் தாங்கியில் விண்ஓடம் பொருத்தப் பட்டிருக்கும். எரிபொருள் தாங்கியிலிருந்து எரிபொருளைப் பெற்று விண்ணோட ரொக்




சனவரி 16 விண்ணை நோக்கி புறப்படும் கொலம்பியா விண்ணோடம்

கட்டுகள் இயங்கும்.

பூமியிலிருந்து புறப்படும்போது திண்ம ரொக்கட்டுகளும் ,திரவஎரிபொருள் ரொக்கட்டுகளும் இயங்கி விண்ணோ டத்தை மேல்நோக்கி செலுத்த உதவும். விண்ணோடம் மேலே செல்லச்செல்ல எரிந்து முடியும். திண்ம ரொக்கட்டுகளும் கழன்று பரசூட் மூலம் கடலில் வீழும். இறுதியாக ஐதரசன் எரிபொருள் தாங்கி யும் எரிபொருள் முடிய கழன்று பரசூட் மூலம் கடலில் வீழும். இதன்பின் விண்ணோ டம் பூமியை வலம் வந்து தன் பணியைச் செய்யும்.

அது மீள தரைக்குத் திரும்புவ தாயின் சுற்றுப் பாதையில் இருந்து விலகி வால்ப்புறம் பூமியை நோக்கி இருக்க நுனி மேல் நோக்கி இருக்க பூமி யை நோக்கிவிழும். அவ் வேளை விண்ணோட ரொக்கட் என்ஜின்கள் இயங்கி வேகத்தைக் குறைக்கும். இப்படி வேகம்குறைய ஒரு விமானம்போல பூமியைநோக்கி திரும்பி இறங்கும். விமான ஓடுபா தையில் இறங்கும் போது பின்புறமுள்ள பரசூட்விரிந்து வேகத்தைக் குறைக்கும்.

இந்தத் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா வின் நாஸா கொலம்பியா, சலஞ்சர்,டிஸ் கவரி,என்டேவர் ஆகிய நான்கைக் கட்டமைத்தது. சோவியத நாடு பியூரன்




விண்ணில் வலம்வரும் சலஞ்சர் விண்ணோடம்

(Buran) என்ற விண்ணோடத்தைக்கட்டி ஒரு கன்னிப் பயணத்தை மட்டும் மேற் கொண்டுவிட்டு பொருளாதார நெருக்க டியால் அதைக்கைவிட்டுவிட்டது.

விண்ணோடங்களில் அமெரிக்கா 1986இல் முதல் விபத்தைச் சந்தித்தது. சலஞ்சர் விண்ணோடம் தரையிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது. இதன்போது அதில் ஏழு வீரர்கள் பயணித்தனர். அவர்களில் இரு வர் பெண்கள். 1986 சனவரி 28இல் தரை யிலிருந்து புறப்பட்ட 73வது வினாடியில் பதினாலாயிரத்தி முன்னூறு மீற்றர் உயரத் தில் சலஞ்சர் விணணோடம் வெடித்துச் சிதறியது. இவர்களில் ஒரு பெண் யப்பா னியர்- தனது முதற்பயணத்தை மேற் கொண்டவர் ஆவார். இது அமெரிக்கா வின் மனித விண்பயணங்களை நீண்ட காலத்திற்கு (1989வரை) தேங்க வைத்தது. இதற்கிடையில் ரசியாவின் ''மிர்'' விண்ணில்லத்தில் மிக மோசமான கோளாறுகள் ஏற்பட்டபோதிலும் உயிரிழப் புக்கள் ஏதும் சம்பவிக்கவில்லை.

1986 சனவரியின் பின் 2003 பெப்ரவ ரியில் அமெரிக்க விண்ணோடம் மீண்டும் வெடித்துச் சிதறியது.

அதிலும் அமெரிக்காவின் முதல் விண ணோடமான கொலம்பியா வெடித்துச் சிதறி யிருக்கிறது. இதிலும் பயணித்தவர்கள் ஏழுபேர். அவர்களில் இருவர் பெண்கள். இஸ்ரேலியர் ஒருவருக்கு இது கன்னிப் பயணம். சலஞ்சர் புறப்பட்டவேளை வெடித் தது, கொலம்பியா இறங்குகையில் வெடித் தது.



விண்வெளிப் பயணத்தை முடித்து தரையிறங்கும் டிஸ்கவரி விண்ணோடம்

சர்வதேச விண்ணில்லம்(ISS) பயணங் களுக்குத் திட்டங்களை அமெரிக்கா ஒழுங்கமைத்திருக்க இந்தவிபத்து நிகழ்ந் திருக்கிறது. இது அடுத்த அமெரிக்காவின் மனிதப் பயணத்தைத் தாமதிக்கும்.

**த.அருவி**

# 'சந்திரிகா'வின் புலம்பலும் ஒப்புதல் வாக்குமூலமும்

**ஒஸ்லோவில்** நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகளையும் பங்குபற்ற ஐ.தே.கட்சி அரசாங்கம் அனுமதித்ததால் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேசரீதியில் பரந்த அளவில் மேற்கொண்ட பிரசாரம் பெரிதும் வலுவிழந்து போய்விட்டதாக சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார சனாதிபதி சந்திரிகா சற்று உரத்த குரலிலேயே புலம்பியுள்ளார்.

அது மட்டுமல்ல தனது கட்சி உறுப்பினர்கள் அனைவருமே நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக விவாதித்து 'புலம்ப' வேண்டுமென்றும் கூறியுள்ளார். சந்திரிகாவை விடவும் இது குறித்து வேறு வகையில் 'ஒப்பாரி' சொல்லியே 'அழுது' வருபவரும் ஒருவர் இருக்கவே செய்கின்றார்.

அவர் தான் இந்த பிரசார யுத்தத்திற்கு தலைமைதாங்கிய தளபதி லக்ஷமன் கதிர்காமர்.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்திற்கு எப்படி பில்லியன் கணக்கில் – செலவழித்தார்களோ அதே போன்று இந்தப்பிரசார யுத்தத்திற்கும் செலவழித்தார்கள் என்பது வெளிப்படையான விடயமாகும். இந்தப் பிரசார யுத்தத்தில் சகலதேச விரோத சக்திகளும், முதுகெலும்பற்ற, சிறிலங்கா இராணுவத்தின் எடுபிடிகளான துணைப்படைத் தமிழ்க் கும்பல்களின் தலைமைகளும் தம்மை சந்திரிகா மீதான 'எஜமானி' விசுவாசத்துடன் இணைந்து கொண்டன.

அரசின் சகல வெகுசன தொடர்பூடக வளங்களும் பயன்படுத்தப்பட்டன. தூதுவராலயங்கள் விடுதலைப்புலிகள், மற்றும் தமிழின எதிர்ப்பு பிரசார மையங்களாகவே செயற்பட்டன. வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் பதவிச் சொகுசுடன் பறந்து பறந்து ஒவ்வொரு நாடாகக் 'கெஞ்சிக் கெஞ்சி' விடுதலைப்புலிகளைத் தடை செய்யுங்கள் என்ற பிரசாரப் போதனையில் ஈடுபட்டார்.

இந்தப் பிரசாரயுத்தத்தின் போது கிடைத்த வெற்றிகளை ஒரு பெரும் வரலாற்று சாதனையாக கருதிய சந்திரிகா கும்பல் ஜெயசிக்குறு போர்போல் இதுவும் அப்படியே படுதோல்வியைச் சந்திக்கும் எனக் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்கள்.

ஓயாத அலைகள் மூன்றாம் கட்டப் போரின் இறுதிக் கட்டத்தின் போது இப்போது சந்திரிகா புலம்பியுள்ளது போன்று அப்போதே அம்மையாரின் மாமனாரும் அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் ~அரசியல் ஜெனரலும் தற்போதைய கொலைக் குற்றவாளியும் சிறை வாசியுமான அநுருத்த ரத்வத்தையும் புலம்பியிருந்தார்.



"புலிகள் பிரசார யுத்தத்தில் வென்று விட்டார்கள். எனினும் நாம் இராணுரீதியிலான போரில் தோற்கவில்லை. சில சண்டைகளில் பின்வாங்கினாலும் போரில் பின்வாங்கவில்லை பின்வாங்கப் போவதுமில்லை என அவர் கூறியிருந்தார். இங்கே சந்திரிகாவும் சரி, ரத்வத்தையும் சரி, கதிர்காமரும் சரி தாம் 'பிரசாரம்' செய்ததை ஒப்புக் கொண்டுள்ளனர். உண்மைக்குப் பிரசாரம் தேவையில்லை. பொய்களை நியாயப்படுத்தவே பிரசாரம் அவசியமாகிறது.

கஷடப்பட்டு மில்லியன் கணக்கில் செலவழித்து மேற்கொண்ட பொய்ப் பிரசாரங்கள் விடுதலைப் புலிகளினால் ராஜதந்திர ரீதியில் அமைதியான முறையில் முறியடிக்கப்படுவதை சந்திரிகாவால் சந்திக்க முடியாமல் இருப்பதில் வியப்பில்லை....

எத்தனையோ பேரை புலம்பவைத்தவர்கள் இப்போது தாங்களே புலம்பத் தொடங்கியுள்ளார்கள். வரலாறு தனக்குள் பெரிதாகச் சிரித்துக் கொள்கிறது.

## நறுக்கென...

# சந்திரிகா புகழ்பாடும் 'சம்பந்த' புராணம்

**சம்பந்தனைத** தெரியும் தானே..? ஞானப்பால் உண்டு தேவாரம் பாடிய ஞானசம்பந்தனைப்பற்றியல்ல நான் கூறப்போவது. திருகோணமலையின் இரா.சம்பந்தனைப்பற்றித்தான் சொல்லப்போகிறேன். முதியவர் என்பதால் அவ்வப்போது 'அறளைத்' தனமாகப் பேசுவார்.

அண்மையில் ஐயா அவர்கள் கூறியதை மறக்கவே முடியாது. சம்பந்தன் அவர்களுக்கு சந்திரிகாவின் ஒரு விதமான அன்பும் மரியாதையும், ஏன் அனுதாபமும் கூட, உண்டு. அம்மையாரோடு முரண்படவே மாட்டார். அவர் மீது சந்திரிகா குண்டு போட்டாலும் கூட அவரைப் பற்றிக் குற்றம் சொல்லாத ஒருவகை விசுவாசமும் சம்பந்தனுக்குண்டு.

இது பலதடவை அவதானிக்கப்பட்ட விடயம் தான்.

ஆனால் இப்போது இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் அதனை எப்படியாவது குழப்புவதற்கு திடசங்கற்பம் பூண்டு சந்திரிகா தனது அதிகாரவலுவையெல்லாம் அதற்குப் பயன்படுத்தத் தயாரான நிலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சம்பந்தனுக்கு 'ஞானப்பால்' அருந்தாமலேயே ஞானம் ஏற்பட்டு சந்திரிகாமீது 'தேவாரம' பாடியிருக்கிறார்.... இல்லையில்லை சூடியிருக்கிறார்.

அதாவது~

"அரசாங்கம் சமஷடி முறையிலான தீர்வு குறித்து சிந்திக்கவும் பேசவுமான மாற்றத்தைக் கொண்டு வந்த முதலாவது சிங்களத்தலைவர் சந்திரிகா குமாரணதுங்க தான் என்றல்லவா சம்பந்தன் கூறியிருக்கின்றார்.



பாவம் தமிழர் வந்தேறு குடிகள் என்றும் சமாதானத்திற்கான யுத்தம் மூலமே சிறிலங்காவின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுக்கான முடியுமெனவும்,சிறிலங்காவில் பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உண்டு இனப்பிரச்சினையென எதுவுமில்லை எனவும் கூறி தமிழ்மக்களுக்கெதிரான மிருகத்தனமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட சந்திரிகா மீது இப்படி ஒரு பாராட்டை வழங்க சம்பந்தனாலேயே முடியும். அது மட்டுமல்ல.....அவர் மேலும் கூறுகையில் "தமிழ் மக்களின் பிரச்சினை அதற்குத் தீர்வு காண்பதில் தனது பங்களிப்பினை வழங்கி ஒரு தேசத் தலைவியாக அவர் விளங்குவார் என்று நான் நம்புகிறேன்" என்றுமல்லவா அவர் தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

என்ன ஒரு நம்பிக்கை... எவ்வளவு ஒரு எதிர்பார்ப்பு... இந்த அளவுக்கு சந்திரிகா மீது அளவற்ற நம்பிக்கை கொள்ள சந்திரிகா தமிழினத்திற்கு என்னதான் செய்தார் என்பதை யோசிக்க...யோசிக்க... தலைகிறுகிறுக்கிறது.

சம்பந்தன் தான் இதற்கும் விளக்கமளிக்க வேண்டும்.... பயங்கரவாதப் பிரச்சினைக்கு சமஷடி மூலம் தீர்வினை இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அடையலாம் என்று சந்திரிகா சம்பந்தனுக்கு ஞானோபதேசம் செய்திருப்பாரோ...? என்ன எல்லாமே சம்பந்தா சம்பந்தமில்லாமல் இருக்கு என்று நினைக்கிறீர்களா....

நாளைக்கே அவர் தனக்கும் இச்செய்திக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் கூறலாம்....

அதுதான் சம்பந்தன்....!?

# 'மகேஸ்வர'க் கோபம் வெளிப்படுத்திய செய்தி



**அமைச்சர்** மகேஸ்வரனுக்கு கோபம் வந்து உணர்ச் சிவசப்பட்டால் அவர் வாய் வழியாகப் பல உண்மைகள் வெளி வந்து கொட்டும். ஆரென்றும் பார்க்கமாட்டார். 'காற்றுள்ள' போதே கதைக்க வேண்டியதை கதைத்துவிட வேண்டும் என நினைப்பவர் போலும்!

அண்மையில் பிரதமருக்கும் அவருக்குமிடையே 'சில்லறை' பிரச்சினைகள் ஏற்பட்டதுடன், பிரதமர் தன்னை சரியான முறையில் கௌரவிப்பதில்லை என்ற மனக்குறையும் மகேஸ்வரனுக்கு உருவேற்றியிருக்க வேண்டும்.

முதலில் சிக்கியவர் டொக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனதான். ஏற்கனவே வடபகுதி மக்களின் மனங்களை எந்தவகையிலும் வெல்ல வேண்டும் என்பது மகேஸ்வர இலக்காக இருக்கையில் 'புனர்வாழ்வு' என்ற பெயரில் ஜெயலத் ஜெயவர்த்தனவின் வடபகுதிப் பிரவேசம் செய்து அதே இலக்குடனும் ஏனைய பல இலக்குகளுடனும் களமிறங்கிய போது இருவருக்குமிடையேயான பனிப்போரும் ஆரம்பமாகிவிட்டது.

தேர்தலின் போதே டக்ளஸ் தேவானந்தாவுடன் ஏற்பட்ட மோதல் இன்னமும் தொடர்கதையாகவே இருக்கிறது.

இடையில் ரணிலுடன் ஏற்பட்டது விசுவாச அதிருப்தி மட்டுமே... அதன் வெளிப்பாடாகவே மகிந்த ராஜபக்சவை யாழில் வரவேற்றதும், கொழும்பில் சந்திரிகாவை பவ்வியமாக அடக்கமாக~ மரியாதையாகச் சந்தித்து உரையாடியதும் நிகழ்ந்தன.

சந்திரிகா முன் மகேஸ்வர தரிசனம் ஏற்பட்டமைக்கு விரைவில் தேர்தல் வரலாம் என்ற எச்சரிக்கை அறிவிப்பும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் செய்திகள் அடிபட்டன.

ஆனாலும் தான் ரணிலின் ஆதரவாளன்தான் சில முரண்பாடுகள் இருந்தாலும் அதனால் தமக்குள் மோதல்கள் எதுவும் ஏற்படவாய்ப்பில்லை என மகேஸ்வரனே முந்திக் கொண்டு அறிக்கைவிட்டு அந்தச் செய்திகளுக்கு ஆப்புவைத்தார்.

அப்போது முரண்பாடுகள் குறித்துக் கூறிய மகேஸ்வரன் சில செய்திகளை உதாரணமும் காட்டினார்.

உயர்பாதுகாப்புவலய மீள்குடியேற்றம் தொடர்பாக இராணுவ நிலைப்பாட்டை அரசு ஆதரிக்கும் வகையில் நடக்கிறது என்றது அதில் ஒன்று....

மற்றது தான் முக்கியமானது. அதாவது ஈ.பி.டி.பி. போன்ற குழுக்களுக்கு மாதந்தோறும் ரணிலின் அரசு சுமார் 70 இலட்சம் ரூபாய்களை வழங்கி வருகின்றது என்பதே அதுவாகும்.

இதனை இதுவரை அரசு மறுக்கவில்லை.....

எனவே இச்செய்தி பல உண்மைகளை தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கவே செய்கின்றது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டே விடுதலைப்புலிகளுடன் பேசக் கூடாது என்ற நிலைப்பாட்டைக் கொண்ட தமிழ் குழுக்களையும் குறிப்பாக சமாதானப் பேச்சு வார்த்தைகளை குழப்பத் திட்டமிடும் சந்திரிகாவை ஆதரிக்கும் ஈ.பி.டி.பியினருக்கு லட்சக்கணக்கில் நிதியுதவியையும் செய்தே வருகிறது....

இதனடிப்படையில் பார்த்தால் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. யினரின் செயற்பாடுகளுக்கு கடற்படையின் அனுசரணையுடன் அரசே உதவி செய்கிறது என்றும் கருத வைக்கிறது.

இப்படிப் பல சந்தேகங்களை...

மகேஸ்வரன் கூறிய இச்செய்தி தமிழ் மக்களை சமாதானம் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வைத்திருக்கிறது.... அதற்காக மகேஸ்வரனுக்கு நன்றி.

# வெளிநாட்டு ஆலோசகர்களும்; சிலசந்தேகங்களும்கேள்விகளும்



**அரசுக்கு...** அதுதான் சிறிலங்காவின் ஆட்சியாளர்களுக்கு (சிறிலங்காவில் இரட்டை ஆட்சி நடப்பது தெரியும் தானே....) இப்போது எதற்கெடுத்தாலும் வெளிநாட்டு ஆலோசகர்களின் ஆலோசனைகளை நாடுவதென்பது ஒரு கலாச்சாரமாகவே மாறிவிட்டது.

சுயமாகப் பிரச்சினைகளை ஆராய்ந்து சுயாதீனமாக முடிவெடுக்க முடியாத 'அங்கிடுதத்தி' நிலையே இப்போது சிறிலங்காவில் நிலவுகிறது.

பிரதமர் முடிவெடுத்தால் சனாதிபதி அதை நிராகரிப்பார். சனாதிபதி ஒரு கருத்தைச் சொன்னால் பிரதமர் அதை மறுத்துரைப்பார். இருதரப்பும் பொது உடன்பாடு ஒன்றை எந்தவிடயத்திலாவது எட்டுவதற்கு முயன்றது இல்லை.

இருதரப்பும் தங்களை ஆளும் கட்சி~எதிர்க்கட்சி என்ற தன்மையில் பார்க்கிறார்களேயன்றி தேசிய நலனைக் கருத்தில் கொண்டு சிந்திப்பதேயில்லை.

அவர்கள் பேசும் தேசிய நலன் அவரவர்களின் பதவிநலன்களைப் பாதுகாப்பதிலேயே இலக்காகக் கொண்டதாக இருப்பதே சிறிலங்காவின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணம்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றமா? உடனே கூப்பிடுங்கள் நம்பியாரை....! அவரது ஆலோசனைகளை வைத்து முடிவெடுக்க வேண்டிய பிரச்சினையா அது? மிகவும் இயல்பான மனிதாபிமான அடிப்படையில், சமாதான இலக்குடன் செயற்படும் ஒரு அரசு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தும் நோக்குடன் சிந்தித்து முரண்பாடுகளை தவிர்த்து உடன்பாடு காணப்பட வேண்டிய பிரச்சினையே அது வாகும்.

அதற்கு ஏற்கனவே சமாதான முயற்சிகளின் முழுமையாக திருப்தி கொள்ளாத ஏற்கனவே இம்முயற்சியில் அரசியல் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு உடன்பாட்டை திணித்து அதில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தோல்வி கண்ட இந்தியாவின் இராணுவ ஜெனரல் இந்தப் பிரச்சினைக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையக் கூடிய முடிவொன்றைச் சொல்வா என எவரும் நம்பினால் அவர்கள் அரசியல்~இராணுவ யதார்த்தத்தை இந்திய இலங்கை புவிசார் அரசியல் நிலைமைகளுடன் ஒப்பிட்டு பார்க்காதவர் களாகவே இருப்பர்.

நம்பியாரின் உத்தியோகபூர்வ அறிக்கை வெளிவரமுன்னரே பூர்வாங்க அறிக்கையே குழப்பத்தை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. அது கிடக்கட்டும்...:

இப்போது சனாதிபதி வெளிநாட்டு ஆலோசகர்களின் உதவியுடன் வடகிழக்குக்கு தனித்தனி ஆளுநர்களை நியமிக்கத் திட்டம் போட்டிருக்கிறாராம்.... வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை நிராகரிக்கும் மூலோபாயத்தின் ஒரு திட்டமே இது....

இந்த ஆலோசகர் கொழும்பு வந்து நிலைமையை ஆராய்ந்தபின்னர் ஆலோசனை கூறுவாராம்... அதன்படி சந்திரிகா முடிவெடுப்பாராம.......

இங்கே மக்கியம் கவனிக்க வேண்டிய விடயம் இந்த ஆளுநர் பதவிகளை பொ.ஐ.முன்னணியின் மூத்த தலைவர்களுக்கே வழங்கவும் போகிறாராம்....

திட்டமிட்டு தீர்மானமும் எடுத்தபின் ஆலோசனை கேட்கும் அதிசய அரசியல் தலைமைகள் சிறிலங்காவில்... மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உயர்பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பாக ஒரு அறிக்கையை முன்வைத்தபின்னர் லெப்ரினன்ட் ஜெனரல் நம்பியாரிடம் அதாவது இந்திய ஆலோசகரிடம் ஆலோசனை கேட்டுள்ளார்கள்..!?

இது அந்த ஆலோசகர்களுக்கு எப்படியான ஆலோசனையை எதிர்பார்க்கிறோம் என முன்னதாகவே அறிவுறுத்தி வைப்பது போலில்லையா?

**செங்குட்டுவன்**

# புலம் பெயர்ந்தோரைத் திருப்புவது காலத்திற்கு பொருந்துமா?

**தாயகத்தில்** யுத்தம் தீவிரம் பெறத் தொடங்கியதையடுத்து அதிகளவிலானோர் பாதுகாப்புத் தேடி அகதிகளாகி தாயகத்தைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள்.

தமது பூர்வீக தாய்நிலத்தைவிட்டு அகதிகளாகி பாதுகாப்புத் தேடிய மக்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

யுத்த அனர்த்தம் அதிகமாக பரவிய வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் அதிகமானோர் தாயகத்திற்கு அண்மையிலுள்ள இந்தியாவின் தமிழ் நாட்டிற்கும் ஐரோப்பிய மற்றும் மேற்கத்தைய நாடுகளை நோக்கி அகதிகளாக படையெடுத்தனர். இவர்களை விட அதிகளவிலானோர் தாயகத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்தனர்.

இவ்வாறு அதிகமான ஈழத்தமிழ் மக்கள் அகதிகளாகி நாடுகள் தோறும் அலைந்து திரிந்த அதேவேளை தாயகப்பிரதேசத்திற்குள்ளேயும் பிரதேசத்திற்கு பிரதேசம் அலைந்து திரிந்தனர். இவ்வாறு அகதிகளாகிய மக்கள் உயிர் மற்றும் பாரிய பொருளாதார இழப்புக்களைச் சந்தித்தவர்களாகவும் உள்ளனர். இந்த மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினையாக பாதுகாப்பின்மை என்பதாகவே இருந்தது.



அதாவது பாதுகாப்பின்மை என்பதில் இந்த மக்களின் உயிர் உடைமை மற்றும் அடிப்படை உரிமைகள் என்பனவற்றிற்குரியதாகவே இருந்தது.

இவ்வாறு அகதிகளாகத் தாய் நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவின் தமிழ் நாட்டில் மட்டும் அகதிகளாக உள்ள ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை எண்பத்தையாயிரம் என அண்மையில் வெளியான ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இதில் அறுபத்து நான்காயிரம் பேர் நூற்று அறுபத்தொரு அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிய வருகிறது.

இத்தனை பெரியதொகையில் ஈழத்தமிழ் மக்கள் வெளியேறுவதற்குக் காரணமாகவிருந்த யுத்தம் இன்று ஓய்ந்து போயிருக்கலாம். ஆனால் அது தீர்க்கமான ஒரு நிலையை அடைந்து விட்டதாக எண்ண முடியவில்லை.

இங்கே ஏன் இதைப் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது என்றால் அரசு புலிகளிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அகதிகளான ஈழத்தமிழ் மக்கள் அகதிகளாக உள்ள நாடுகள் யாவும் திருப்பி அனுப்புவதற்கு முனைப்புக் காட்டத் தொடங்கிவிட்டன. சில நாடுகள் அனுப்பவும் தொடங்கிவிட்டன.

இதில் இந்தியாவில் உள்ள அகதிகளை வரும் ஏப்ரல் மாதத்துடன் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் பூர்த்தியாகிவிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

ஏனைய மேற்கத்தைய நாடுகளில் சில புள்ளிவிபரங்களை வெளியிடத் தொடங்கியுள்ளன. பிரிட்டனிலிருந்து முதற்கட்டமாக பன்னீராயிரம் பேர் திருப்பியனுப்பப்படவுள்ளனர் எனவும் ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

ஆனால் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற்ற போதிலும் மக்கள் மீளக்குடியேறக் கூடிய சூழ்நிலை தாயகத்தில் தற்போது வரவில்லை.

அகதிகள் தொடர்பான விடயங்களை கையாளும் நாடுகள் இன்று காட்டும் அவசரம் தற்போது தேவையற்றதொன்றாக இருப்பதோடு இந்த நாடுகள் சமாதான முயற்சி தொடர்பாக காட்டும் அக்கறை சந்தேகங்களையே தோற்றுவிக்கும்.

உண்மையில் இந்த நாடுகள் சமாதானப் பேச்சுக்கள் குறித்து வெளியிடும் திருப்திகள் தமது நாடுகளில் உள்ள ஈழத்தமிழ் மக்களை வெளியேற்றி விடவேண்டுமென்ற தமது நாடுகளின் நலன்களை மட்டும் குறிவைத்ததாக உள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது. உறவினர்களையும் பொருளாதாரத்தையும் இழந்து இந்த நாடுகளில் இன்று அரசியல் தஞ்சம் கோரி நிற்கும் இம்மக்களின் பிரதேசங்களே இன்று உயர்பாதுகாப்பு வலயங்களாகவும் இராணுவ சோதனைச் சாவடிகளாகவும் உள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினை இராணுவத் தரப்பு நியாயப்படுத்துவதற்குரிய காரணங்களில் ஒன்று தாம் முகாம் அமைத்து உள்ள வீடுகள் வெளிநாடு சென்றவர்களுடையது என்பதாகும்.

இராணுவம் உயர்பாதுகாப்பு வலயத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பையும் நியாயப் படுத்த வெளிநாடு சென்றோரை ஒரு புறம்பயன்படுத்த புலம்பெயர்ந்தோர் வாழும் நாடுகளோ சமாதான முயற்சிகளை பயன்படுத்தி புலம் பெயர்ந்தோரை திருப்பி அனுப்புவதற்கு முயல்வதாகவும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் கால்பந்து போல பயன்படுத்தப்படுகின்றர்கள்.

இவற்றைவிட உள்ளூரிலேயே இடம் பெயர்ந்து அலையும் மக்களே இன்னமும் தமது பிரதேசங்களிற்கு சென்று மீள் குடியேறக்கூடிய சூழ்நிலை தோன்றவில்லை.

உள்ளூரிலேயே இடம் பெயர்ந்து வாழுகின்ற மக்களின் வீடுகளில் அதிகமானவை இராணுவ பாவனையில் இருப்பதால் அந்த மக்கள் மீளவும் குடியேற முடியாத நிலையுள்ளது.

அல்லது தமது வீடுகள் அமைந்துள்ள பிரதேசங்களை சூழக்காணப்படும் இராணுவ பிரசன்னம் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாக மீளக்குடியேற முடியாமலுள்ளது.


இவ்வாறு இடம்பெயர்ந்தோர் மீளக்குடியேற முடியாதவாறு அந்த மக்களிற்கு நெருக்குவாரங்கள் அதிகமாக உள்ளது.

அதிலும் மீளக்குடியேறிய பின்னர் பாதுகாப்புப் பிரச்சினை அதிகமாகவே உள்ளது.

கடந்த காலங்களில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவத்தினர் புரிந்த மிலேச்சத்தனமான கொடூரங்களால் இராணுவப் பிரதேசங்களிற்குள் மக்கள் மீளக்குடியேற அஞ்சுகின்ற நிலைமையே காணப்படுகின்றது.

இதனை உறுதி செய்யுமாப்போன்றே அண்மையில் வெளியான செய்திகள் உள்ளன. வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் வீடுகளிற்குள் புகுந்து பெண்கள் மீது இராணுவத்தினர் பாலியல் வல்லுறவை மேற்கொள்ள முயன்றுள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் மீளக் குடியேறக்கூடிய அவர்கள் சமஅந்தஸ்துடனும் கௌரவமாகவும் வாழக்கூடிய ஏதுநிலை தோன்றும் வரை அகதி அந்தஸ்துக் கோரி புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்களை தாயகம் திருப்பி அனுப்புவதனை இந்த நாடுகள் கைவிடுதல் வேண்டும்.



இன்று தாயகத்தில் நிலவும் அசாதாரண நிலையினை இந்த நாடுகள் தவறான மதிப்பீடுகளிற்கு உட்படுத்திவிடக்கூடாது.

**சிறீ.இந்திரகுமார்**

உள்ளூரில் இடம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப் பட்டும். அடிப்படை வசதிகளற்று இந்தியாவின் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் வாழ்கின்ற மக்கள் குடியேற்றப்பட்டும் நிரந்தர சுமுகநிலை ஒன்று தோன்றும் பட்சத்திலேயே புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களை இந்த நாடு திருப்பி அனுப்புவது பற்றி சிந்திக்க வேண்டும்.

இதனையே அண்மையில் அகதிகளிற்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்.) விடுத்துள்ள செய்திக் குறிப்பும் தெளிவுபடுத்துகின்றது.

அதாவது புலம் பெயர்ந்து வாழுகின்ற அல்லது புகழிட அந்தஸ்து கோரி நிற்கும் மக்களின் பிரச்சினையை அணுகவேண்டுமென்பதையே ஐ.நா. உயர்ஸ்தானிகராலய அறிக்கை சுட்டி நிற்கின்றது.

யுத்தம் தீவிரம் பெற்றகாலத்தின் போதும் சமாதான நல்லெண்ணச் சூழ்நிலைகள் நிலவுகின்றதாக கூறப்படும் இக்காலப பகுதியிலும் தாயகத்தில் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்ற யூ.என்.எச்.சி.ஆர் போன்ற தொண்டர் நிறுவனங்களின் மதிப்பீடுகள் தற்போதைய நிலைமையினை சரியான வகையில் மதிப்பீடு செய்துள்ளதையே காட்டுகின்றது.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களே மீளக்குடியேறக்கூடியவாறு பாதுகாப்பினை அல்லது அடிப்படை உரிமைகளை வழங்க மறுக்கும் அரசினை நம்பிப் புகழிட அந்தஸ்து கோரிநிற்கும் மக்களை திருப்பி அனுப்ப மேற்கத்தைய நாடுகள் காட்டும் அவசரம் காலத்திற்கு பொருந்தாத நடவடிக்கையாகவே இருக்கும். ■

## சில பதிவுகள்...



## சமாதானம்...

**சமாதானம்** என்பது இலங்கையில் இன்று காசு பண்ணுவதற்கான ஒரு ரேட் மாக் (Trade mark) ஆக மாறிவிட்டது. சமாதானம் அல்லது சமாதானத்துக்கான நடவடிக்கைகள் என்பவை சாதாரண மக்களுக்கு பயனளிக்கிறதோ இல்லையோ வர்த்தகப் புள்ளிகளுக்கு மட்டும் அது மிகமிக உதவுகிறது. இதற்காக அவர்கள் வெவ்வேறு பதாதைகளின் கீழ் விதவிதமான வர்த்தக நடவடிக்கைகளைத் தினம்தினம் முடுக்கிவிடுகிறார்கள். இந்தப் பதாதைகளில் " சமாதானம்- சமாதானத்துக்கான " என்ற வார்த்தைகளைத் தவறாமல் சேர்த்துக் கொள்கிறார்கள்.

உதாரணமாக கொழும்பில் இன்று இசைநிகழ்ச்சிகள் தினம் தினம்நடக்கின்றன. தென்னிந்தியப் பாடகர்கள், நடிகர்களை அழைத்துப் பிரபல நிறுவனங்கள் இந்த நிகழ்வுகளை நடத்துகின்றன. இவற்றுக்கு பெருமளவு விளம்பரங்களும் செய்யப் படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் மேடையில் கட்டப்படும் பதாதையில் "சமாதானம் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது தென்னிந்தியத் திரைப்படம் ஒன்று இலங்கையில் படமாக்கப்படவுள்ளதாக பெருமளவு முக் பத்துவம் கொடுத்து ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுகிறது. அதன் தயாரிப்பாளரும். கதாநாகியும் இலங்கையர்கள் என்றும் அடிக்கடி சொல்லப்படுகின்றது. அந்தத் தயாரிப் பாளர் சொன்னார்.

"சமாதானத்தை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" உண்மைதான்-எல்லோரும்பயன்படுத்தித்தான் கொள்கிறார்கள்.

ஆனால் யுத்தத்தால் தின்னப்பட்ட அப்பாவி மக்களுக்கு மட்டும் சமாதானத்தின் பலன்கள் இன்னும் எட்டாக்கனியாகவே இருக்கின்றன.

**இ.விவேகானந்தன்**

☞ நிகழ்காலம் பிரிவதற்கு முன், வெகுவிரைவில் எதிர்காலம் வந்து சேர்கிறது. –எஃபஃபெண்டி கேவ்.

**இச் சோலை பெரியம்மாவிடமும் இங்கு பணியாற்றும் ஒவ்வொரு தாய் மாரிடமும் தான் கற்கவேண்டும்.**



# தாய்மடி வாசம் 11

சுதந்திரா

ஓயாத இயந்திர வாழ்வுடன் போராடும் புலம்பெயர் அம்மாக்களின் வேலைக்களைப்பும், சுமையும் பிள்ளைகளைக் கூடச்சரிவரக் கவனிக்க முடியாத துர்ப்பாக்கியம் நிறைந்த அவலம் ஒருபுறம். இன்னொருவகை அம்மாக்கள் பொழுது விடிந்தால், இரவு உறங்கப்போகும் வரைக்கும் தமிழ்த் தொலைக்காட்சியுடன் அல்லது வானொலியுடன் அரட்டையடிப்பதுடனும் பணவசூலே குறியாகக் கொண்ட சினிமாத்தொடர்களைக் குவித்துவைத்திருக்கும் வீடியோக் கடைகளின் வாடிக்கையாளர்களாகி... அதுவே அவர்களின் வாழ்வாக வாழ்ந்து கொண்டு பிள்ளைகளின் நலனிலும் அக்கறையின்றி தனி ஒருவனாய் உழைக்கும் ஆணுக்கும் துணையின்றி பணத்தையும் விரயமாக்கி தமது நேரத்தையும் வீணாக்கிக் கொண்டும் இருக்கின்ற அவலம் இன்னொருபுறம். இந்த அசமந்தப்போக்குகள் அனேகமான வீடுகளில் உள்ள குழந்தைகளில் பலரை வன்முறையாளர்களாக, போதைக்கு அடிமையானவர்களாக ஆக்கியிருக்கும் கொடுமை அனைத்திலும் பெரும் கொடுமையாய் நினைவில் எழ புலம் வாழும் நமது நிம்மதியற்ற வாழ்வின் மீது ஏற்பட்டுள்ள அச்சம் எனக்குள் பலமடங்கு அதிகமாயிற்று.

இவர்கள் போல் ஒவ்வொரு இளம்தாயையும், தந்தையையும் வழிநடத்த ஒருவரில்லாமலேயே நமது சமூகம் புலத்தில் பல அவலங்களையும், அழிவுகளையும் சந்திக்கிறதோ...? எமது சமூகத்துக்கான வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய எமது தமிழ் ஊடகங்களே பணத்தை மட்டும் பார்த்து

"நா ரெடி நீங்க ரெடியா..?"

"வாடிவாடி நாட்டுக் கட்டை,"

"எப்படி எப்படி"

என்று நீளும் ஆபாசப்பாடல்களுக்கான நேயர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதையே தம் கடமையாக நினைத்து தென்னிந்தியக் குப்பைகளைக் குவித்து சமூகத்தின் வாழ்வில், வளர்ச்சியில் எந்தவித அக்கறையோ அவதானமோ இன்றியிருப்பது இன்னும் தொடராய் நீள...எமது புலத்து சமுதாயத்துக்கான வழிகாட்டியாக யார் வரப்போகிறார்கள்..? கேள்விகள் என்னைத் தொடராய் ஆக்கிரமிக்க... என்னைத்தன் மழலைக்குரலால் அழைத்த அந்தக்குரலுக்குரிய குயிலோடு சேர்ந்து விடுகிறேன்.

"அன்ரி நீங்கள் ஏன் என்னோட அப்போதை கதைக்கேல்ல. என்ர பெயர் குயில். எனக்கு 4 வயது" என்றாள் அந்தச் சுட்டிக் குயில்.

"எனக்கு உங்கட பேர் தெரியாது அதுதான் பிள்ளையோட கதைக்கேல்லை"

என்றேன் நான். என்மடியில் வந்திருந்து அந்தக் குயில் கதைக்கத் தொடங்கினாள்.

"உங்களுக்குப் பாடத்தெரியுமே குயில்...?"

"ஓ நான் பாடுவன்"

"உங்களுக்குத் தெரியுமே அன்ரி...?"

"இல்லை எனக்குத் தெரியாது....?" சரி குயில் ஒரு பாட்டுப்பாடுங்கோ பாப்பம்" என நந்தா கேட்க

"அபியும் பாடினாத்தான் நானும் பாடுவன்" என நந்தாவின் தோளில் சாய்ந்திருந்த அபிராமியையும் சேர்த்தழைத்தாள் குயில் "அபிக்குட்டியும் பாடுவீங்களாம் என்ன பாடுங்கோ பாப்பம்...."

குயிலுக்குத்துணையாக அபியும் பாட ஆரம்பிக்க அருகில் நின்ற மற்றைய சின்னவர்களும் பாடத் தொடங்கினார்கள்...

எப்படி போனது அந்த இரண்டரை மணித்தியாலங்களும் என்பது தெரியாமலே போய்ச் சேர்ந்தது. அந்தப் பிள்ளைகளுடன் இருந்து விடலாம் போல... அந்தளவுக்கு எனக்குள் அவர்கள் நேசமாகி விட்டனர்... முதல் முதலாய் என்னை நெருங்கி என்னுடன் உறவான குயிலையும், அபியையும் விட்டுப் போக மனசு மறுத்தது. எனினும் என்பிள்ளைகளிடம் நான் போயாக வேண்டுமல்லவா....! அந்தச் சோலையில் வாழும் அந்தச் செல்வங்களுடன் கழிந்த அந்த இனிய நிமிடங்களின் நினைவோடு விடை பெறுகிறேன். அந்த மதிய வெயிலில் அந்தச் சோலை வாசல் விட்டு சிவநகருக்குச் செல்கிறோம்.

"எப்படியக்கா செஞ்சோலை?" அமைதியாய் வந்த என்னைக் கேட்டாள் நந்தா. "அந்தப் பிள்ளையளோட இருந்திடலாம் போல இருக்கு நந்தா."

"அப்ப அங்கயிருக்கிற உங்கட பிள்ளையள்...?" "ம்" என்று மட்டும் சொல்லி விட்டு நான் அமைதியாகிறேன்.

ஆண்டவனே என்பிள்ளைகளுக்கு நான் இல்லாது போனால் இந்தச் சோலைக்கு அவர்களும் வந்து சேரவேண்டும். இந்தப் பெரியம்மாவின் நேசமும், நெஞ்சு நிறை அன்பும் என் உறவுகளிடமிருந்து என்பிள்ளைகளுக்குக் கிடைக்கும் என்பது நம்பிக்கையில்லை எனக்கு. ஏனெனில் பணந்தானே எங்கள் உறவுகளின் ஒரே எதிர்பார்ப்பாய் இருக்கிறது. நாம் பணம் காய்க்கும் மரங்களாகத் தானே அவர்களுடைய கண்களில் தெரிகிறோம். இங்கிருந்து வரும் ஒரு கடிதத்துக்காக எவ்வளவு ஏங்குகிறோம் என்பதை ஏனோ எங்கள் உறவுகள் எண்ணியே பார்ப்பதில்லை... பணம் போகும் போது தருகின்ற அன்புமிகு வார்த்தைகளை பணம் அனுப்பத் தவறும் நேரங்களிலும் ஏன் தருவதில்லை? ஓ... பணம்தான் பாசத்தையே தீர்மானிக்கிறதா?

"அக்கா பின்னேரம் 3 மணிக்கு வெளிக்கிட்டு நில்லுங்கோ நான் வாறன் என்ன"

என்நினைவோட்டத்தைக் கலைத்துச் சொன்னாள் நந்தா.

" பின்னேரம் ஆரைப் பார்க்கிறது"

"வந்து பாருங்கோவன் அப்பதானே உங்களுக்குச் சந்தோசமாய் இருக்கும்"

"என்ன புதிரா..?".

கேள்வி கேட்ட எனக்கு சிரிப்பை மட்டுமே பதிலாக்கினாள் நந்தா.

அந்த மாலைப்பொழுது வெய்யில் சாய்ந்து கொண்டிருந்தது. அந்த வீட்டின் விறாந்தையில் நான் காத்திருக்கின்றேன். அடுத்துவரும் நிமிடங்களுக்கான எனது காத்திருப்பின் அவசரத்தைப் புரிந்த அந்தப் போராளி அக்கா என்னைக் கேட்கிறாள்

"என்ன யோசிக்கிறீங்கள்"

"இல்ல நந்தாவை இன்னும் காணேல்லை"

"இப்ப வந்திடும் நீங்கள் தமிழீழ வானொலி கேளுங்கோவன்" சரி போடுங்கோ. தமிழீழ வானொலியில் இனிய பாடலொன்று ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இனிய பாடலில் இணைந்து விட்ட எனது நினைவோட்டத்தைத் தடுத்து நிறுத்தியது அந்தப் பெயரும் அந்தப் பெயருக்குரிய குரலும்... நினைவாகிய ஞாபகங்களிலிருந்து எழுந்தது. ஓ... நான் தேடிய சீலண்ணா... இப்போ தமிழீழ வானலையில்... அந்த 1991 இல் ஏதோ ஒரு அலுவலாய்ப் போன இடத்தில் நட்பாகிய அந்தச் சீலண்ணாவின் குரல்... சிலநாட் பழக்கமது. எனினும் அப்போதைய என் சிறுபிள்ளைத் தனங்களுக் கெல்லாம்... இப்படிச் செய்யும்... அப்படிச் செய்யும் என ஆலோசனை சொல்லி என்னை வழிநடத்திய குரல் இப்போ... வானலைகளில் வந்திருப்பது மகிழ்வாய் இருந்தது. சீலண்ணாவைச் சந்தித்து என்னை நினைவிருக்கா எனக் கேட்க வேண்டும் போல இருந்தது. விரைவில் புலம் திரும்ப வேண்டிய காரணத்தால் அந்த விருப்பத்தைத் தள்ளி வைத்து விடுகிறேன். அடுத்த வருடம் சீலண்ணாவின் முன் என்பிள்ளைகளுடன் போய் நின்று என்னைத் தெரிகிறதா எனக் கேட்க வேண்டும் என எண்ணிக் கொள்கிறேன்.

வெளியில் நந்தாவின் மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்க அந்த போராளி நந்தா தான் எனச் சொன்னா... ஓம் நந்தா தான் நந்தாவின் பின் வந்த அந்தப் பெண் போராளியைப் பார்த்ததும் நான் உயரே பறக்கிறேன். ஆம் எனக்குப் பிடித்த பாடகி, என்னைக் கொள்ளை கொண்ட பாடகி தன்னினிய குரலின் இனிமையால் என்னைத் திரும்பத்திரும்ப அழவைத்த அந்தக் குருவிக் கூட்டம் போல எங்கள் வாழ்விருந்தது எனும் பாடல் ஊடாய் என்பிரியத்திற்கினிய பாடகியாய் விட்ட பாடகி மணிமொழி என்முன்.

நான் காண்பது கனவில்லையே... என்னையே நான் கேட்கிறேன். ஒளிவீச்சு ஒன்றில் பார்த்த அந்த முகம் இப்போ என்முன். தரிசனமாய் இருக்கிறதல்லவா... "வணக்கம்!" சொன்ன எனக்கு தனது வணக்கத்தையும் சொல்லி இருங்கோ என்றது அந்தக் குரல் ஓ... என்கனவுகள் பலித்தன.

நான் காண விரும்பியவர்கள் எல்லாம் இத்தனை விரைவாய் என்முன்.... எங்களது உரையாடல் ஆரம்பமாகிறது. பல ஞாபகங்கள் பகிர்ந்து தனது பாடல் அனுபவங்கள், போராளிகளுடனான உறவுகள், கள அனுபவங்கள் என அந்தக் குயிலின் அனுபவப் பகிர்வுகள் நீண்டு சென்றது.

பெண் பற்றி, மண் பற்றியெல்லாம் நீண்ட உரையாடல்கள் கிட்டத்தட்ட நாலரை மணித்தியாலம் தாண்டியும் முற்றுப் பெறாது நிற்க விடை பெறுகிறோம்.அடுத்தமுறை பிள்ளைகளையும் கூட்டி வந்து நிறையக் கதைப்பமக்கா, சொல்லி விடை பெறுகிறேன்.... அடுத்த முறை யாழ்ப்பாணத்தில சந்திப்பம் எனச் சொல்லி என்னிடமிருந்து விடைபெற்றுப் போகிறது அந்த இசைக்குயில்...

சிறந்த ஒரு ஆளுமை மிக்க தமிழீழப் பெண்ணியத்தின் வளர்ச்சியையும், மலர்ச்சியையும் கட்டியம் கூறிநிற்கும் ஒரு பெண் போராளியின் முன்னாலிருக்கிறேன். பல கவிதைகள் ஊடாகவும், கட்டுரைகள் ஊடாகவும், பாடல்கள் ஊடாகவும் எனக்கு அறிமுகமான எழுத்துகளுக்குச் சொந்தக்காறி.



19.02.02 வன்னியை விட்டு நான் புறப்படும் பொழுது அன்று விடிந்தது. நேற்றுச் சொன்னபடி நந்தா எட்டு மணிக்கு வந்து விட்டாள். தென்னைகள் சூழ்ந்திருந்த அந்த வளவினுள் பிரவேசிக்கிறோம். "வணக்கம் வாங்கோ !" எங்களை வரவேற்ற அந்தப் பெண்போராளிகளுடன் உரையாடியபடி நிற்கிறோம்...

தொடரும்...

சிறு கடன் கடனாளியை உண்டாக்குகிறது. பெருங்கடன் பகைவனை உண்டாக்குகிறது. - புப்பிலியஸ் ஸைரஸ்







**அனந்தன்** வீட்டிற்கு வந்து மூன்று நாட்களாகிவிட்டது. வெளிநாட்டிலிருந்து 12 வருடங்களின் பின்னர் வீடு வந்த அவனை எல்லோரும் விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

90 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடந்த விமானக் குண்டு வீச்சில் அனந்தனின் தகப்பனார் இறந்துவிடக் குடும்பப் பொறுப்பு இவனது தலையில் வந்தது. குடும்பத்தைக் காப்பாற்ற உழைப்பிற்காக உறவினரின் உதவியுடன் 90ஆம் ஆண்டே தனது O/L படிப்பை இடைநிறுத்திவிட்டு வெளிநாடு சென்றவன். பன்னிருவருடங்களாக உடலை வருத்தி உழைத்துக் குடும்பத்தை முன்னேற்றிவிட்டிருந்தான்.

தற்போதைய சமாதான சூழலால் வீட்டாரின் அழைப்பின் பேரில் 3மாத விடுமுறையில் அவன் வந்திருந்தான்.

அனந்தனின் சொந்த இடம் குமரபுரம் பரந்தன். அங்கு அவர்களுக்குச் சொந்தவீடு வளவு உண்டு. சத்ஜெய நடவடிக்கை காரணமாக அவனது வீட்டார் இடம் பெயர்ந்து கந்த புரத்தில் வசித்து வந்து தற்போது கனகபுரத்தில் வசித்து வருகின்றார்கள்.

அனந்தன் இங்கு வந்து மறுநாள் மாமா வீட்டிற்குச் சென்றான். இவனைக் கண்டதும் மாமி ஓடிவந்து இவனைக் கட்டிப்பிடித்து அழுதார். அருகில் நின்ற மாமா அழுகையை அடக்காமல் கண்களைத் துடைத்துக் கொண்டார். மாமிக்குக் கீதா ஒரே ஒரு மகள். சின்ன வயதிலேயே கீதாவை இவனுக்கு கட்டி வைப்பதென்று பெற்றவர்கள் நிச்சயித்து விட்டார்கள். சிறு வயதிலிருந்தே இருவரும் பாசம் வைத்துப் பழகினார்கள்.

மாமியைச் சமாளித்து வாசல் தாண்டி வீட்டிற்கு அனந்தன் சென்றபோது விறாந்தையில் வீரவணக்கத்தின் கீழ் வரியுடையில் சிரித்தபடி வரவேற்கிறாள் அவன்ர கீதா.

"நல்லாப்படிச்சுக் கொண்டிருந்தவள் கிளிநொச்சிக்கு ஆமி வந்தவுடன் இயக்கத்துக்குப் போய்விட்டாள். லீவிலை வரேக்கை உன்னைநலம் கேப்பாள். கடைசியாக நடந்த ஆனையிறவுச் சண்டையிலதான் வீரச்சாவடைந்தவள்." "கிளிநொச்சியில விதைச்சனாங்கள்" மாமா அழுகையை அடக்கமுடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சின்ன வயதில் ஓடிப்பிடித்து விளையாடியது, ஒன்றாகப் பாடசாலைக்குப் போனது, சண்டைபிடித்து இடையில் கதைக்காமல் விட்டது. வெளிநாடு செல்லும்போது கடைசியாக சந்தித்துக் கதைத்தது "நீங்கள் திரும்பி வரும்வரை காத்திருப்பன்." என்று கூறி வழியனுப்பி வைத்தது என்று பழைய நினைவுகள் அனந்தனுக்கு வந்து வந்து போயின.

வீடு திரும்பிய அனந்தன் தனிமையிலிருந்து கையிலிருந்த படத்தைப் பார்த்தவாறு அழுது கொண்டிருந்தான். அது அவன் வெளிநாடு செல்வதற்கு முன்பு தனது ஞபகமாக கீதா அவனுக்குக் கொடுத்த ரோசாச் செடிகள் மத்தியில் நின்று சிரித்துக் கொண்டிருக்கும் அவளது புகைப்படம்.

அனந்தன் வந்து ஒருவாரமாகி விட்டது. இவன் வந்திருப்பதை அறிந்த குமார் அன்று காலை அவனைப் பார்க்க வந்திருந்தான்.

**மா. தமிழவன்**

அனந்தன், குமார், சந்திரன், பாலன், கரன், நிசாந்தன், என்று பலர் ஒன்றாகப் படித்தவர்கள். அனந்தனும், குமாரும், சந்திரனும் உயிருக்குயிராகப் பழகியவர்கள். ஊரில் மூவரும் ஒன்றாகவே திரிவார்கள். அனந்தன் வெளிநாடு சென்றுவிட அவர்களிருவரும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டனர். சந்திரன் ஆனையிறவுச் சண்டையில் வீரச்சாவடைந்து விட்டான்.

நீண்ட நாட்களின் பின்னரான சந்திப்பு அனந்தனைக் கண்டதும் குமார் ஓடிவந்து கட்டிப்பிடித்தான். பழைய நினைவுகளை கதைத்துவிட்டு இருவரும் ஆனையிறவு பார்க்க குமாரின் உந்துருளியில் சென்றனர்.

உந்துருளி டிப்போச் சந்திக்கு வந்ததும் "இது தான் மச்சான் கிளிநொச்சி மத்திய கல்லூரி" என இடத்தைக் காட்டினான் குமார்.

சத்ஜெயவில் இந்த இடத்தை பிடித்தவன் தொண்ணூற்றெட்டில திருப்பி அடிச்சுப் பிடிச்சனாங்கள். பள்ளிக்கூடத்தில ஆமி இருந்தவன் ஓடிப்போன பிறகு கிபிரால குண்டு போட்டு உடைச்சுப்போட்டான்" விளக்கினான் குமார்.

கரடிப்போக்குச் சந்தியை அடைந்ததும் உந்துருளியை நிறுத்தினான் குமார்.

"ஓயாத அலைகள் இரண்டில இந்த இடத்தை பிடிச்சனாங்கள். சந்தியைப் பிடிக்க நல்லா கஸ்ரப்பட்டனாங்கள்." தனது பழைய அனுபவத்தைக் கூறினான் குமார்.

பரந்தன் சந்திக்கு கிட்ட வந்ததும் வேகத்தைக் குறைத்த குமார் இந்த இடத்திலதான் கிளிநொச்சி சண்டைக்கு பால்ராஜ் அண்ணையாக்கள் "பொக்ஸ்" அடிச்சவை இதாலதான் கிளிநொச்சி எங்களிடம் வீழ்ந்தது." குமார் சொல்ல அனந்தனுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது.

பரந்தன் சந்தியைத் தாண்டியதும் குமரபுரம் நோக்கி உந்துருளி திரும்பியது. கொஞ்சத் தூரம் பயணித்ததும் உந்துருளியை நிறுத்திய குமார் "இது தான் மச்சான் உங்கட வீடு" என்று ஓரிடத்தைக் காட்டினான்.

அவனது கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. இதுதானா எனது வீடு? சின்ன வயசில ஓடி விளையாடிய முற்றம். ஊஞ்சல் கட்டி ஆடிய மரம், ஆசையாய் நட்டு நீரூற்றி வளர்த்த பூமரம் எல்லாம் எங்கே? எதுவுமே இல்லையே.

தென்னைகள், வாழைகள் என்று சோலையாய் இருந்த வளவு இப்போது வீடொன்று இருந்ததற்குச் சாட்சியாய் அத்திவாரம் மட்டும் எஞ்சி இருக்கிறது. ஆசையாய் நீர் அள்ளிக் குளித்த கிணற்றடி புதர் மண்டிக் கிடக்குது. அவனுக்கு அந்த இடத்தைப் பாக்க அழுகை வந்தது.

> "ஓ.. போர் எத்தனை கொடியது. அதன் வலிய கரங்களில் சிக்குண்டுசிதைந்து போனவை தான் எத்தனை எத்தனை. நேரடியாகக் காணும் போதே இப்படி என்றால் அனுபவித்திருந்தால் எவ்வளவு கொடுமையாக இருக்கும். அந்நிய தேசத்தில் இருக்கும் போது எதுவும் தெரியவில்லையே.

தொடர்ந்து அனந்தனைக் கூட்டிச் சென்ற குமார் "இதுதான் நாங்கள் படிச்ச பாடசாலை" என்று இன்னோர் இடத்தைக் காட்டினான். அங்கு பா்டசாலை ஒன்று இருந்ததற்கான அடையாளமாய் பாதி அழிந்த நிலையில் பெயர்ப்பலகை மட்டுமே எஞ்சி நின்றது.

ஓ... ஆறு வயதிலிருந்து எனக்கு அறிவூட்டிய பாடசாலை இன்று இருந்ததே தெரியாமல் அழிந்து கிடக்கிறதே.

ஓடிப்பிடித்து விளையாடிய மைதானம், கல்விகற்ற வகுப்பறை, அருகிருந்த அதிபர் அலுவலகம், அருகிருந்த ஆலயம் என்று எதுவும் எஞ்சவில்லையே...

வகுப்பில் குழப்படி செய்து ஆசிரியரிடம் பிரம்படி வாங்கியது தண்டனையாக வெய்யிலில் முட்டுக் காலில் நின்றது, உயிர் நண்பனுடன் கட்டிப்பிடித்துப் புரண்டு சண்டை பிடித்தது என்று பழயவை எல்லாம் நினைவில் வந்து வந்து போயின.

"ஓ.. போர் எத்தனை கொடியது. அதன் வலிய கரங்களில் சிக்குண்டு சிதைந்து போனவை தான். எத்தனை எத்தனை. நேரடியாகக் காணும் போதே இப்படி என்றால் அனுபவித்திருந்தால் எவ்வளவு கொடுமையாக இருக்கும். அந்நிய தேசத்தில் இருக்கும் போது எதுவும் தெரியவில்லையே.

தொடர்ந்து ஆனையிறவுக்கு அனந்தனைக் கூட்டிச் சென்ற குமார் உமையாள்புரம் தாண்டி கொஞ்சம் வந்ததும் உந்துருளியை நிறுத்தினான்.

இந்த இடத்திலதான் மச்சான் சந்திரன் வீரச்சாவடைஞ்சவன் என்று கூறிய குமார் விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

"இதிலதான்.. இதிலதான் மச்சான் அடிச்சுக் கொண்டு முன்னேறேக்க நான் காயப்பட்டு விழுந்திட்டன். என்னைத் தாண்டிப்போன சந்திரன் நெஞ்சில வெடிபட்டு வீரச்சாவடைஞ்சிட்டான். என்று கூறி ஓரிடத்தைக் காட்டினான் குமார்.

"ஒண்டாத்தான் சண்டைக்கு வந்தனாங்கள், கடைசியாக வெளிக்கிடேக்கை ஒண்டா இருந்து ஒரு பாசலில சாப்பிட்டனாங்கள்" பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்தான் குமார்.

குமார் சொல்லச் சொல்ல அனந்தனுக்கு பழைய நினைவுகள் வந்து வந்து போயின. சந்திரனுடன் ஒன்றாய் திரிந்தது. வயற்பரப்பில் ஓடியாடி விளையாடியது, ஊர்க்குளத்தில் குளித்தது, ஆளையாள் மாறி மாறி நீரில் தாட்டது, கடைசியாக கண்ணீர் மல்க விடைகொடுத்து அனுப்பியது என்று எல்லாமே வந்து வந்து போயின.

ஆனையிறவு பார்த்ததன் பின் கிளிநொச்சி திரும்பியவர்கள் நேராக கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லம் சென்றார்கள். உள்ளே கூட்டிச் சென்ற குமார் இதுதான் சந்திரன விதைச்ச இடம் என்று அங்கிருந்த கல்லறை ஒன்றைக் காட்டினான். கல்லறைக்கு மேலே வீரவணக்கத்தின் கீழ் சந்திரனது விபரங்கள் எழுதப்பட்டு இருந்தன. தொடர்ந்து சென்றவன் ஓரிடத்தில் நின்று "இது தான்ரா கீதாவின்ர கல்லறை" என்று காட்டினான் குமார்.

ஓ.... என்னருமைக் கீதா என்னையே நினைத்து எனக்காகவே வாழ்ந்தவள் இன்று அமைதியாய் துயில் கொள்கிறாள். பொக்கற்றுக்குள்ளிருந்த 'பேர்ஸை' எடுதது அதிலிருந்த கீதாவின் படத்தை பார்த்தவாறு கண்ணீர் மல்கத் தொடங்கினான் அனந்தன்.

என்னையே நினைத்து வாழ்ந்த என்னருமைக் கீதா. அருமை நண்பன் சந்திரன் என்று ஆயிரமாயிரம் பேர்கள் அன்னை மண் விடிவிற்காய் தம்பணி முடித்து இங்கே அமைதியாய் துயில் கொள்கிறார்கள். அவர்கள் இங்கே போராடி மடிந்த போது, அந்நிய தேசத்தில் ஆடம்பரமாய் வாழ்ந்ததையிட்டு வெட்கம் கொண்டான் அனந்தன்.

வீடு திரும்பிய அனந்தனுக்கு மனம் ஒரே குழப்பமாக இருந்தது. வீட்டாரின் உபசரிப்புகளிலெல்லாம் அவன் மனம் லயித்திருக்கவில்லை.

அனந்தன் வந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டிருந்தன. அடிக்கடி குமார் வந்து போனான், இரண்டு மாதத்தில் அனந்தன் நிறைய மாறியிருந்தான்.


அனந்தனுக்கு விடுமுறைக் காலம் முடிந்து திரும்பிச் செல்ல வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

"போக வேண்டிய நாளும் நெருங்குது. பயண ஒழுங்கெல்லாம் செய்ய வேணும் எப்ப தம்பி போகப்போறாய்" மகனைப் பிரிகின்ற கவலையில் அனந்தனைக் கேட்டாள் தாயார்.

"இல்லையம்மா நான் இனித் திரும்பிப் போகேல்லை. இங்கேயே நிக்கப்போறேன்" என்று அமைதியாகக் கூறினான் அனந்தன்.



நிகழ்காலம், கடந்த காலம், இரண்டும் எதிர்காலத்தில் அடங்கியிருக்கக் கூடும். —டி.எஸ்.ஈலியட்



# நூல்நோக்கு

நூலின் பெயர் :தமிழ் இலக்கணப்பூங்கா
ஆக்கியோன் :பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்
விலை :150/=
வெளியீடு :பொன்னெழுத்துப்பதிப்பகம் இணுவில்.

மனம் மகிழ மகிழ எதைக் காண்கிறோமோ அது கல்மேல் எழுத்தாக மனதில் ஆழமாகப் பதிந்து எமக்கு அறிவாகி விடுகிறது. இந்த உளவியல் உண்மை போற்றப்படாமையாலேயே இன்று மொழியிலக்கணம் அது கற்பிக்கப்படும் கவர்ச்சியற்ற குழப்பமான முறைமைகளால் ஒரு பயங்கரமாக மாணவர்களால் கருதப்பட்டு, வேண்டாவெறுப்பாகச் செவி கொடுக்கப்பட்டு நீர் மேல் எழுத்தாக மறக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாகக் கடந்த இரண்டு சகாப்தங்களில் வழுக்கள் மயமாக எழுதும் ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களே பெருமளவில் உற்பத்தியாகியுள்ளனர். இதனூடும் மாணவர்கள் இரசனையோடு சுயமாக முனைந்து தேடல், திரட்டல் மூலம் தம்மிலக்கண அறிவைப் பெருக்கிக் கொள்ளும்படி அதனைக் கவர்ச்சிகரமாக, தர்க்க ரீதியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களதும், இனிதாக கவர்ச்சிகரமாக விளக்கும் இலக்கண நூல்களதும் பணியும் இங்கே இருந்தே வருகின்றன.

இந்த வகையில் எளிய சொல்நடை மாணவன் எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகரமான, உதாரணங்கள் அல்லது தமிழின் - தமிழினத்தின் பெருமையை மறைமுகமாக உணர்த்தி அவன் பெருமித உணர்வினாலும் ஊக்கம்




பா.இளங்கோ.B.A

பெற்று தமிழ்க் கல்வியில் மும்முரம் கொள்ள வைக்கும் உள் நோக்கத்துடனான செய்திகளாலான உதாரணங்கள் சுருங்கிய ஆனால் முழுமையான தமிழிலக்கண அறிவை மாணவன் எட்ட வைக்கும் அடிப்படை விடயங்கள் மட்டும் தெரிந்தெடுத்து விளக்கும் விடயத் தெரிவு என்பவற்றின் மூலம் மாணவன் மனம் மகிழ்ந்துலாவும் தமிழ் இலக்கணப் பூங்காவாகவே இந்நூலை ஆக்கியுள்ளார் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள்.

இந்நூலின் மூலம் மகிழ்ச்சிகரமாகத் தான் கற்றறிந்த தன் இலக்கண அறிவைப் பரீட்சித்துப் பார்த்து வெற்றி, அனுபவம் பெற்று, உட்சாகம் பெறவைக்கும் பெறுமதி வாய்ந்த அங்கமாக பயிற்சி வினாக்களும் அமைந்துள்ளன.

ஒரு தமிழ் இலக்கண நூலை அச்சிடுவதென்பது பலவகைக் குறியீடுகளைக்கொண்ட ஒரு கணித நூலை அச்சிடுவது போன்ற அத்துணை கடினமானது. ஆயினும் இந்நூல் நாவலரின் நூல்களின் பதிப்புகள் போன்றதாய் எந்தப் பிழையு மின்றி பொறுப்புணர்ச்சியோடு அச்சிடப்பட்டமை பாராட்ட வேண்டியதாகும். இதனை தக்கபடி பயன் கொள்வது தமிழ் உலகின் கடமையாகும்.

# அயலும் அழுகையும்



என்னது
குழந்தையழுகிறானா!?
வெளியே கொண்டுவந்து
பராக்குக் காட்டி
அழுகையை நிறுத்த
முயலாதே.
தயவு செய்து
"கொண்டுலாத்த"
வெளியில் வராதே.
அயலில்
எங்குபார்த்தாலும்
தொங்குகிறது
மண்டையோட்டுக்குறி.
சிகப்பில் வெள்ளையாய்
அதைக்கண்ணுற்று
வீரிட்டழலாம் குழந்தை
தேற்றமுடியாமல்
"தாக்காட்ட"
வெளியில் கொண்டுவராதே
பிள்ளையை.

ஆவரங்கால் சுதன்

# வட்டிழந்த பனைமரம்

ரமணன்



அந்த...ஒற்றைப் பனை
வட்டிழந்து
என் வீட்டு முற்றத்தில்
மொட்டையாய்
நின்றது.
"சீ..... முளிவளத்துக்கு
கூடாது
இதை..... தறிப்பம்"
அம்மாவின் குரல்
காற்றில் தேய்ந்த
போது
என்ன தறிக்கிறதோ
கடைசிவரையும்
நான் விடமாட்டன்
கட்டையில போறமட்டும்
அப்பாவின்
வைராக்கியமான
குரல்.... ஓங்கி
நின்றது.
நான் அதை
அண்ணாந்து
பார்க்கிறேன்
இருவரின்
முரண்பாடும்
முற்றி
மௌனத்தில்
நின்றது.
மீண்டும் என்
பார்வை
அந்தப் பனை மரத்
தின்மீது
படிந்தது.
அதன் வட்டுக்குள்
ஓர் பொந்து
கிளியின்
குஞ்சுகள்.
அவைகளின்
வாழ்விடம்.
சிறுவயதில்
எத்தனை
தடவை அதை
சுற்றி...சுற்றி
ஓடி விளையாடி
இருக்கின்றேன்.
ஆனால்,
இன்று
அதைச்சுற்றி
என்னால்
ஓட முடியவில்லை.
அம்மா என்னைப்
பார்த்து கண்ணீர்
சிந்தி நி[illegible]கிறாள்.
சுதந்திரமாக
பறந்துதிரியும்
அந்தக் கிளிகளின்
வாழ்வுக்கு
அந்தப் பனைமரம்
தஞ்சம்.
கால் ஒன்றை
அதனடியில்
இழந்து
நான் நின்ற போது
மீண்டும் என்பார்வை
அந்த வட்டிழந்த
பனைமரத்தில்

# உருவகம் -ஒன்று

# சவாரிமாடுகள்

"என்ர இராசனவை இப்ப கொஞ்சம் சோர்ந்து போய் நிக்கினம். கன நாளாய் ஒரு போட்டியும் இல்லை அது தான்..."

இளையதம்பியர் மாடுகளைத் தடவிக் கொடுத்தார்.

அவர் கண்ட சவாரிக் களங்கள் ஏராளம். எதிரியை மண் கவ்வச் செய்து அவரை உலகறியச் செய்த காளைகளுக்கு இப்ப ஓய்வென்றால்... ஊர் நிலைமை அப்படி....

காளைகளைத் தடவித்தடவி முதுகில் தட்டினார். காளைகள் முதுகைச் சற்றுத் தாள்த்தி நிமிர்த்தின. அவரோடு செல்லம் பொழிந்து துள்ளிக்குதித்தன.

அவர் மெதுவாகக் கொடுப்புக்குள் சிரித்தார்.

''எனக்கும் விளங்குது நுகம் பூட்டவேணும் என்று'' கொஞ்சம் பொறுங்கோ. கால நேரம் சரிவரட்டும்.

மூக்கணாங் கயிறைப் பிடித்து நாக்கை வெளியில் இழுத்துத் திரட்டி வைத்திருந்த தவிட்டு உருண்டையைத் தொண்டைக் குழிவரை தள்ளிவிட்டார்.

காளைகள் திமிறின.

ஓ! "இப்ப தவிடு பிடிக்காது தான். வேலையும் குறைவுதான். சுதந்திரமாய்த் திரிந்து மேயிறியள். எண்டாலும் மனம் சோரக் கூடாது. இன்னும் எங்கடை இலக்கை அடைய நாங்கள் தயாராய் இருக்க வேணும்."

காளைகள் உடலைச் சிலிப்பின. கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சதங்கைகள் கலீர்....கலீர் என ஒலித்தன.

இளையதம்பியர் மாடுகளைத் தடவி முதுகில் தட்டி உசார்ப்படுத்தி விட்டு பட்டியை விட்டு வெளியே வந்தார்.

தன்னை எப்படியாவது தோற்கடித்துவிட வேண்டுமென்பதில் பல போட்டியாளர்கள் குறியாய் இருந்து செயற்படுவதும் சிலா சதித் திட்டங்கள் தீட்டுவதும் அவருக்குத் தெரியாததில்லை. அவர் பல களங்களைக் கண்டு தேறியவர். ஒவ்வொரு போட்டிகளிலும் அவரது மனவுறுதி அசையாத நம்பிக்கையும், யுக்திகளும் வெற்றிகளைக் குவித்தன.

புதிய புதிய முகங்களை எல்லாம் சந்தித்தவர். பலர் களத்திலிருந்து ஒதுங்கிக்கொண்ட போதிலும், பல ஆண்டுகளாக தனித்து நின்று தன் வெற்றிகளைக் குவித்த சமர்த்தர் என்பது ஊரறிந்த உண்மை.



அவருக்கு அபிமானிகள் ஏராளம். முகம் தெரியாத பலரும் அவரின் திறன்களைப்பற்றிப் பேசிப் பெருமைப்படுவார்கள். அந்த அளவுக்கு அவரின் பெருமை கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது.

இளையதம்பியரை யாராலும் தோற்கடிக்க முடியாது என்ற நிலை உருவான பின் போட்டிகளை பின் போடுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டதை உணர்ந்து கொண்ட அவர் சங்கத்தில் தானே பின் போடுவதற்கான பிரேரணையை முன் வைத்தார்.

இவரின் முன்மொழிவு பலரை வியப்பிலாழ்த்தியது. ஆதரவாளர்கள் அபிமானிகள் அதிர்ந்து போனார்கள்.

அவர் தனது அபிமானிகள் பலரைச் சந்தித்து தனது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தினார். அவர்களும் இளையதம்பியரின் நியாயங்களை ஏற்றுக் கொண்டனர்.

எதிரிகள் எல்லோரும் ஒரே முகமாய்ச் செயற்படுகின்றனர். அவரது திறமையை முறியடிக்கவும், வெற்றியைத் தடுக்கவும், குறுக்கிட்டு வியூகங்களை அமைக்கவும் முயல்வர். எதையும் முறியடிக்கும் பலத்தை மேலும் பயிற்சிகளின் மூலம் காளைகளைத் திடப்படுத்துவதே இறுதி வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கை அவருக்கு.

இந்த நீண்ட [illegible]டைவெளி ஓய்வு அவருக்குச் சாதகமாக அமைந்ததில் நியாயம் இருந்தது. இந்தப் போட்டியே இறுதியாக நடக்கப்போகிறது. இதில் வெற்றி உறுதியாக்கப்படும் போது அவரே இந்தத் தேசத்தின் தனித்துவமான சவாரி வீரராகத் திகழப் போகிறார்.

இளையதம்பியர் தலைப்பாகையை அணிந்து கொண்டு வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டார். காளைகள் ஓடத் தொடங்கின. வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் காளைகளின் மூக்கணாங்கயிறைச் சுண்டி இழுத்து நிறுத்தி வாய் நுரையை அள்ளிக் காளைகளின் மேனியில் தடவினார்.

இது இறுதிப் போட்டிக்கான ஒத்திகை. பலர் பேரம் பேசி வந்தார்கள். காளைகளுக்கு விலை பேசினார்கள். பல வசதித் திட்டங்களை முன் வைத்தார்கள். அவர் மசிந்து கொடுக்கவில்லை. தனது இலக்கில் குறியாய் இருந்தார்.

அவருக்கு நம்பிக்கை......!
வெற்றி நிட்சயம்......!

முருகு பாரிமகன்

விரும்பத் தகாத உடமையை விட விரும்பத்தக்க எதிர்பார்ப்பே சிலாக்கியமானது. - யாரோ




## பொய் நட்பு

ஒரு காட்டில் மிருகங்களும் பறவைகளும் ஒன்றாக வாழ்ந்து வந்தன. திடீரென ஏதோ பிரச்சினை காரணமாக இரு பகுதியினருக்கும் சண்டை மூண்டது.

பறவைகள் போல பறப்பதும் மிருகங்கள் போல குட்டி போட்டு பால் கொடுப்பதுமான வௌவால் எந்தத் தரப்பிலும் சேராமல் தனியாக இருந்தது. இறுதியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களின் பக்கம் சேர்ந்து விடலாம் என முடிவு செய்தது.

ஒரு தடவை பறவைகளின் கை ஓங்கி, மிருகங்களை பயங்கரமாக தாக்கிக் கொண்டிருந்தன. உடனே வௌவால் பறவைகளிடம் போய்,

''நானும் உங்களை போலவே பறக்கிறேன் மரங்களில் தான் வாழ்கிறேன். நானும் உங்கள் இனந்தான் என பறவைகளுடன் சேர்ந்து கொண்டது.

சில நாட்களின் பின் பறவைகளின் பக்கம் தோல்விக்கான அறிகுறிகள் தென்பட்டது.

இங்கேயே இருந்தால் பறவைகளுடன் சேர்ந்து மிருகங்கள் என்னை கொன்றுவிடும் என்று எண்ணியது வௌவால்.

உடனே மிருகங்களிடம் ஓடிச்சென்று, நானும் ஒரு விலங்கு உங்களை போன்று குட்டி போட்டு பால் கொடுக்கின்றேன், என்று அவற்றுடன் சேர்ந்து கொண்டது வௌவால்

சில நாட்கள் சென்ற பின் பறவைகளுக்கும் மிருகங்களுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டது. அதனால் இரு பகுதியினரும் சண்டையை நிறுத்திவிட்டன.

வௌவாலின் சந்தர்ப்பவாத சூழ நிலையை பறவைகளும் விலங்குகளும் தெரிந்து கொண்டு வௌவாலை விரட்டியடித்து விட்டன.

இதனால் வௌவால் ஒன்றுடனும் சேராமல் தனியாக வாழ்ந்து வந்தது.

வௌவால் பின்பு தனது தவறை எண்ணி வருந்தியது.

மு.முரளி
கிளிநொச்சி.

## வாரம் ஒரு குறள்



நட்பு என்பது ஒருவர்க்கு உயிருக்கு ஒப்பானது, இடுக்கண் வரும் போது அது உயிராக நின்று உதவும். அதுவே நட்பு என்பது. அதிலும் கெடுதி விளைவிக்கும் நட்பை ஏற்றுக்கொள்ளுதல் கூடாது. அதை விட நேர்மையான எதிரி சிறந்தவன். அவன் எம்மை எப்பொழுதும் அவதானமாகவும், உஷார் நிலையிலும் இருக்க உதவுகின்றான். ஆகவே நன்மை செய்வதாக நடிக்கும் நண்பனை விட, தீமையே செய்ய விழையும் எதிரி மேலானவனாகின்றான். எதிரியிலும் எம்முன் வளைந்து போகின்ற எதிரியை நம்புதல் கூடாது. அது, வளைந்து கொடுக்கின்ற வில்லானது அம்பை நம் மீது செலுத்த முனைவது போன்றதாகும். அதனையே வள்ளுவரும் தமது குறளில்,

"சொல் வணக்கம் ஒன்னார் கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்''

என்று அழுத்தமாகச் சொன்னார்.

## சிட்டுக்கள்





சின்னச் சின்னச் சிட்டுக்கள்
சிறகடிக்கும் சிட்டுக்கள்
வெள்ளை உடைச் சிட்டுக்கள்
வெண்மை உள்ளச் சிட்டுக்கள்
கல்வி பயிலும் சிட்டுக்கள்
கரைகள் தேடும் சிட்டுக்கள்
கலைகள் நவிலும் சிட்டுக்கள்
களிப்பைச் சொரியும் சிட்டுக்கள்
பண்பை வளர்க்கும் சிட்டுக்கள்
பருகிச் சிறக்கும் சிட்டுக்கள்

செ.தாட்சாயினி
மு/உடையார்கட்டு ம.வி

## பொது அறிவு

1. இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டம் உள்ளன?
   24
2. பாராளு மன்றத்தில் எத்தனை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்?
   225பேர்
3. சனாதிபதியாக எத்தனை வருடங்கள் பதவி வகிக்க முடியும்?
   6 வருடங்கள்
4. இலங்கையில் மக்களுக்கு முதல் தடவையாக எப்போது வாக்குரிமை வழங்கப்பட்டது?
   1910 ஆம் ஆண்டில்
5. சாக் நாடுகளில் அணு ஆயுதப் போட்டியுடன் தொடர்புடைய நாடு எது?
   இந்தியா, பாகிஸ்தான்
6. தென் ஆசியாவில் மன்னர் ஆட்சி நிலவுகின்ற நாடுகள் எவை?
   நேபாளம், பூட்டான்

த.தவமணி
புதுக்குடியிருப்பு.

## நகைச்சுவை


முயல்: பூனையாரே! பூனையாரே! கணனிக்கு முன்னாள் இருந்து என்ன யோசிக்கிறீர்?

பூனை: மௌஸ்பிள்ளை எப்போ வருவார் என கணனியில் பார்க்கிறேன்.




த.கேசவன்
தரம் -8
மு/பாரதி வித்தியாலயம்


## விலங்குகள்



நாக்கற்ற பிராணி
முதலை



சுவாசப்பை அற்ற
பூச்சி -தேனீ




சிறிய இதயம்
கொண்ட மிருகம்
சிங்கம்



செவிப்புலன் அற்ற
பிராணி - பாம்பு

சு.கௌரீசன்
மு/வித்தியானந்தக்கல்லூரி

## எங்கள் வீடு



கிணற்றில் நீர் எடுத்து
ஆற்றுக் கரையில் மணல் எடுத்து
குளக்கரையில் களி எடுத்து
மேட்டில் புழுதி மண் எடுத்து
வன வளத்தில் மரம் எடுத்து
வயல் வெளியில் புல் எடுத்து
ஊற்றெடுக்காத நிலம் எடுத்து
எடுத்த நிலத்தில் சாத்திரியார் வந்து
நிலையெடுத்து
அமைக்கப்பட்டதுதான்
எங்கள் வீடு

துவாரகன்
தரம் ~5
கிளி/கிளிநொச்சி ம.வி.

### சர்வதேசக் குறியீடுகள்

| | |
|---|---|
| வெள்ளைப்புறா | -சமாதானம் |
| சக்கரம் | -வளர்ச்சியை குறிக்கும் |
| தாமரை | -பண்பாடு நாகரீகம் |
| சிவப்பு விளக்கு | -மருத்துவமனை, ஆபத்து |
| தலைகீழானகொடி | -துக்கம் |

உ.மதிவர்மன்,
சிறி. சுப்பிரமணிய வித்தியாசாலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 07

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | | 04 | | |
| 07 | | | 10 | | |
| | 14 | 15 | | | |
| 19 | | | | | |
| | | 27 | | 29 | |
| 31 | | | | | |

இடமிருந்து வலம்
01) ஆறு கடலுடன் சேருமிடம்
07) சிரார்த்த தினம்
10) உயர்ந்த சாதி வண்டு
14) மங்கலப்பொருள்
19) கொடுஞ்செயல்
27) முதியவன் குழம்பியுள்ளது.
31) இடம் இறுதி எழுத்தை இழந்துள்ளது.

மேலிருந்து கீழ்
01) வஞ்சனை
04) பெற்றோரை இவ்வாறு அழைப்பர்.
15) சிரச நங்கை இறுதி எழுத்தை இழந்துள்ளது.
19) தண்ணீர்.
29) துன்பம் இறுதி இரு எழுத்தை இழந்து குழம்பியுள்ளது.

**குறுக்கெழுத்துப்போட்டி 05**
விடைகள்
இடமிருந்து வலம்
01)சுனிதா ராணி
07)சாதாரணம்
22)தரம்
25)தவம்
29)கோள்
31)அங்காத்தல்

மேலிருந்து கீழ்
01)சு[illegible]ங்குதல்
03)தாரகை
04)சாராயம்
18)அகோரம்
20)தவறு

பரிசுக்குரியவர்
க.அஜந்தா
விசுவமடு ம.வி
பாராட்டுக்குரியவர்
அ.சீலன்
இல.29 வள்ளிபுனம்

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.07
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

உடல் நலனையும், ஒழுக்கத்தையும் சீர்குலைக்கும் நோய், கடன். - ஸரதுஸ்ரர்

# பெற்றோலிய மாற்றீடாக மதுசாரம்

# வன்னியில் கரும்பு உற்பத்திக்கு ஒரு ஊக்குவிப்பு

**மூலப் பொருட்களின் வகையும் வழங்கலும்**

எதனோலுக்கான மரபுவழி மூலப் பொருட்களாக கரும்பு, தானிய மணிகள் ( பிரதானமாக சோளம், பார்லி, அரிசி), திராட்சை, சிலவகை வேர்கள் உற்பத்திகள் (மரவள்ளி, இனிப்பு பீற்றூட், உருண்டைக் கிழங்கு) முதலியவை இருக்கின்றன. உள்ளார்ந்ததிறன் ரீதியாக சொல்வதானால், ஹெக்ஸோஸ் சீனிச் சத்தை (HEXOSE SUGARS) தரக்கூடிய எந்த முதலையும் பயன் படுத்தலாம். எமது நாட்டில் பெறக்கூடிய மூலப்பொருட்கள் சில, ஒரு ஹெக்ரேயருக்கு தரக்கூடிய சராசரி உங்பத்தியையும் அவற்றிலிருந்து, நியாயமான அளவு செயற்றிறன் கொண்ட செய்முறைகள் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய எதனோலின் சராசரி அளவுகளையும் கீழேயுள்ள அட்டவணை தருகிறது:

மூலப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகள் இரண்டு திசைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

1) லிக்னோஸெலுலோஸ் (LIGNO CELLULLOSE) இலிருந்து நொதிக்கச் செய்யக் கூடிய ஹெக்ஸோஸ்களை உற்பத்தி செய்வதன் செயற்றிறனை அதிகரிக்கச் செய்வது.

2) தங்களுடைய சீனி உள்ளடக்கம் காரணமாக உயர்விளைவுவளம் கொண்ட பல்வேறு வகை தனித்தண்டு (அல்லது பாம்) மரவகைகள் (PALMS) (உதாரணம் கிழக்கிந்திய பனை வகைகள் - NIPA- கறியோட்டா - CARYOTA)- புல்வகைகள் மற்றும் பழங்கள் போன்ற புதிய தாவர முதல்களை அடையாளம் காணுதல்.

இவற்றுள், காய்ச்சி வடிப்பதற்கு தாங்களே எரிபொருளாக (BAGASSE சக்கை) பயன்படுகிற கரும்பு போன்றவை தவிர்ந்த ஏனையவற்றுக்கு வேறான எரிபொருள் வழங்கல் தேவையாக இருக்கும் என்பது தாவர முதல்கள் மீதான ஒரு வரையறையாக இருக்கிறது.

லிக்னோ ஸெலுலோஸை நேரடியாக அல்லது மறைமுகமாக மதுசாரமாக மாற்றும் சிக்கனமான செய்முறை ஒன்று மிக அண்மைக்காலத்தில் கண்டு பிடிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பரீட்சார்த்தமட்டங்களிலான தொழிற்சாலைகளை நிர்மாணித்திருப்பதோடு, அவற்றுக்குத் தேவைப்படக் கூடிய உள்ளீடுகளை பெறும் நோக்கத்தோடு உயிரியல் திணிவு முதல்களை பயிரிட்டும் இருக்கின்றன.

ஒரு தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டபின் தவிர்க்க முடியாமல் எழக் கூடிய, மீளப் புதுப்பிக்கப்படக் கூடிய சக்தித் தொழில்நுட்ப உட்கட்டுமாணங்களை முகாமை செய்யும் பிரச்சினைகள் காரணமாக தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைத் தாமதப்படுத்தாமல் தொழில்நுட்பம் உருவாகும் பொழுதே இப்பிரச்சினைகளை கையாள்வதற்கு மேற்படி செயற்பாடு வழிவகுக்கிறது.

**உயிரியல் திணிவு பயிரிடுதலும் விவசாய உற்பத்தியும்**

பெரிய அளவிலான மதுசார எரிபொருள் உற்பத்தியினுடைய சமூக ரீதியான பின்விளைவாக உணவுப் பொருட்கள் அல்லது அவற்றை உற்பத்தி செய்யும் நிலங்கள் மதுசார உற்பத்திக்கென திசை திருப்பிவிடப்படலாம் என்ற அச்சம் பரவலாக நிலவுகிறது. அதாவது பணக்கார வட்டாரங்கள் திரவ எரிபொருளுக்கான தங்கள் தாகத்தை ஏழைகளின் வழமையான உணவுப் பொருட்களைப் பலி கொண்டு தீர்த்துக் கொள்ளக்கூடும் என்பதே இந்த அச்சமாகும்.



இதனோடிணைந்ததாக மதுசாரத்துக்கென பயிரிடும் ஏக்கர் அளவை அதிகரிப்பதானது விரைவான மண் அரிப் பையும் மண்வள இழப்பையும் ஏற்படுத்தி விடலாம் அல்லது பரந்த பகுதிகளிலே ஒரே வகையான பயிரை பயிரிடுவதனால் பயிர்களில் ஏற்படக் கூடிய நோய்கள் அல்லது அழிவு செய்யும் புழுபூச்சிகளின் தாக்கத்துக்கு பெரும்பரப்புகள் ஒரே நேரத்தில் உட்பட்டுவிடலாம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

விவசாய உற்பத்திகளிலிருந்து மதுசார எரிபொருளை உற்பத்தி செய்வதானது விவசாயத்துக்கே உதவும் என மதுசார ~ எரிபொருளுக்கு ஆதரவானோர் கூறுகிறார்கள். விலை ஊக்குவிப்பு இல்லாமை உற்பத்திகளை இயந்திரமயப்படுத்தவும் சந்தைக்கு நகர்த்தவும் முடியாத அளவுக்கு எரிபொருள் தட்டுப்பாடு அல்லது உயர்ந்த எரிபொருள் விலை காரணமாக தலா ஹெக்ரேயர் உற்பத்தியை இணைப்பதானது, சரியாக

| பொருள் | விளைவு வளம் தொன்/ஹெக்/வருடம் | எதனோல் லீற்/தொன் | எதனோல் லீற்/ஹெ/வருடம் |
|---|---|---|---|
| கரும்பு | 50~90 | 70~90 | 00~8000 |
| இனிப்பு பீற்றூட் | 45~50 | 90 | 750~5300 |
| உணவு பீற்றூட் | 45~50 | 90 | 4400~9350 |
| அரிசி | 2.5~5.0 | 430 | 1075~2150 |
| மரவள்ளி | 10~65 | 170 | 1700~11050 |
| திராட்சை | 10~25 | 130 | 1300~3250 |

*குறிப்பு : உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு தொன் சீனிக்கும் கிட்டத்தட்ட 300kg கரும்பஞ்சாறு கிடைக்கும். ஒரு தொன் கரும்பஞ்சாற்றை 245 லீற்றர் எதனோலாக மாற்றமுடியும்.*

முகாமை செய்யப்பட்டால் மேலதிக ஏக்கர்களை உற்பத்திக்குள் கொண்டு வராமலே உற்பத்தித் திறனை அதிகரிக்க உந்து சக்தியாக விளங்கமுடியும். இந்தவகையான விவசாயம் தொழில்துறைக்கு அவசியமான சந்தை வாய்ப்புக்கள், விலை ஊக்குவிப்புக்கள், இறுக்கமான முகாமைத்துவம் முதலியவை இருந்தால் உருவாகக் கூடிய உற்பத்தி திறனானது உணவு, எரிபொருளுக்கான உயிரியல் .திணிவு இரண்டையுமே வழங்கி ஊரகப்பகுதிகளுக்கு புத்துயிர்ப்பு ஊட்டக் கூடியதாகவிருக்கும். இந்த அதிகரித்த பயிர் உற்பத்தியானது எதிர்காலத்தில் அதிகரிக்கப்போகின்ற மக்கள் தொகைக்கு உணவூட்டப்பயன்படுத்தப்படும் அதேவேளை உணவுப்பொருள் அல்லாத முதல்கள் அல்லது மக்களின் வழமையான உணவுப்பொருள் உற்பத்திக்குப் பொருத்தமில்லாத நிலங்களில் பயிரிடப்படும் எரிபொருள் உற்பத்திக்கான மரங்கள் அல்லது விவசாய ~ காடு வளர்ப்பு அமைப்பின் கீழ் பல்நோக்கு மரங்கள் முதலியவற்றிலிருந்து அதிகமதிகம் எரிபொருளை உற்பத்தி செய்ய முடியும்.

மதுசார உற்பத்தியினூடாக பெறப்படக்கூடிய பொருண்மிய மேம்பாட்டுக்கான திறவுகோலாக முதலீடுகளும், முகாமைத்துவமும் கிடைக்கக் கூடியதாக இருப்பது இருக்கிறது. இவை வளர்முக நாடுகளில் மிகவும் தட்டுப்பாடான விடயங்களாகும். எனினும் இன்னுமொரு முறை பெற்றோலியம் உற்பத்திகளின் விலை அதிகரிக்கும் போது உள்ளூர் உற்பத்திகளின் செய்தகு தன்மைமீது அதிகரித்த கவனம் செலுத்தப்படும் விவசாயத்துக்கு நன்மை விளைவிப்பதற்கு எரிபொருள் உற்பத்தியை பயன்படுத்துவதன் செய்தகு தன்மை பற்றிக் கவனத்தில் எடுக்காமலும் இருக்க முடியாது.

**மதுசார எரிபொருள் உற்பத்தியிலுள்ள பின்னடைவுகள்**

பெரிய அளவில் பயன்படுத்தும் எரிபொருள் மூலமாக இருக்கும் திறன் எதனோலுக்கு இருக்கிறது என்று தீர்க்கமாக எடுத்துக் கொள்வதற்கு முன்பதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வரையறைகள் சில இருக்கின்றன.

1) உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு கலன் எதனோலுக்கும்10 ~ 15 கலன் வரையான வீசப்படவேண்டிய கழிவுப் பொருள் எச்சங்கள் இருக்கும்.

2)நொதிக்க வைப்பதற்கும் காய்ச்சி வடிப்பதற்கும் பெருமளவு நீர் தேவை

3) மரபு வழியாகவே எதனோலானது 'அருந்தக் கூடிய பொருள்' என்றே கருதப்படுகிறது. எனவே இதனுடைய உற்பத்திக்கான விதிகளும் நியமங்களும் இப்பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டவையாகவே அமைந்திருக்கின்றன. எரிபொருள் என்ற பாவனையை அடிப்படையாகக் கொண்டவையாக அவை இல்லை.

மெதனோலுக்கு இதைவிடக் குறைவான வரையறைகளே இருக்கின்றன. உயிரியல் திணிவில் இருந்தான அதன் உற்பத்தியை எதனோல் உற்பத்தியை போல் இலகுவாப் புரிந்து கொள்ள முடியாது. அதன் உற்பத்திக்கான முதன்மை உபகரணங்கள் சிக்கலானவையாகவும் அதிகவிலை கொண்டவையாகவும் இருக்கின்றன. மெதனோல் எதனோலை விட நச்சுத்தன்மை வாய்ந்தது. அதனைப் பயன்படுத்தும், கையாளும் பொருட்களை எதனோலை விட அதிகளவில் அரித்து விடக்கூடியது. அதோடு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் களஞ்சிய வசதிகளின் நிர்மாணப் பொருட்கள் சிலவற்றையும் மாற்றீடு செய்ய வேண்டியிருக்கும்.

எது எப்படியிருப்பினும் எதனோல் மற்றும் மெதனோலை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுவருகின்றன. அத்தோடு பெற்றோலிய அடிப்படை எரிபொருட்களை விட கையாள இலகுவான எரிபொருட்களாகவும் இவை இருக்கின்றன. சூழல் மாசடைதல் கிட்டத்தட்ட பூச்சியத்துக்கு வரும். வாகன ஆயுள் அதிகரிக்கும். ANTI KNOCK ஆக பெற்றோலில் கலக்கப்படும் ரெற்றா ஈதையில் ஈயம் (TETRA ETHYl LEAD ~ $(C_2H_5)_4Pb$) ஆனது நஞ்சூட்டலை உருவாக்கும் என்பதால் அபாயகரமானதாகும். மதுசார எரிபொருளைப்பயன்படுத்துவதன் மூலம் இதன் பாவனை அற்றுப்போகும்.

மேலே கூறப்பட்டுள்ளவைகளின் பின்னணியில் அண்மையில் கரும்பு ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் கலாநிதி. நந்த தர்மவர்த்தன தெரிவித்தகருத்தைப் பார்ப்போம்

"உலர் வலயத்துக்குகந்த பயிர் கரும்பு மழை நீரைப் பயன்படுத்தி பெருமளவு ஏக்கர்களை பயிரிடலாம்......

*கிளிநொச்சி / வவுனியாவின் மண்வளம் மற்றும் காலநிலை முதலியவை இப்பயிரை வர்த்தக ரீதியான அளவுகளில் பயிரிட வாய்ப்பானவை "*


என்று அவர் கூறியிருப்பது எங்கள் கண்களைத் திறக்க வேண்டும். எம் தாய் மண் பல்வேறு காரணங்களை சொல்லி அந்நியருக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் முந்திக் கொள்ளா விட்டால் எம் மண்ணின் இதயப்பகுதியிலேயே இந்த அவலம் நிகழலாம். இலக்குகள் தெரிகின்றன. பாதையும் தெரிகின்றது. விழித்துக் கொள்வோமா? விரைந்து செயல்படுவோமா?

ஆக்கம்: **வின்சென்ற் புளோறன்ஸ்**

ஆதாரம்: ALCOHOL FUELS - OPTIONS FOR DEVELOPING COUNTRIES

குறிப்பு : இந்நூலில் இவ்விடயம் தொடர்பான வாசிப்புக்கான ஏராளமான நூல்களின் விபரங்கள் காணப்படுகின்றன.

முற்றும்.




**செய்தி** ஆளும் கட்சியால் நாட்டுக்கு ஆபத்து என்றால் பிரதமரை பதவியில் இருந்து நீக்கி விடுவேன் என சந்திரிகா கூறுகிறார்.

மயிலர் : போகிற போக்கைப் பார்த்தால் ரணிலின் தூக்கம் அதிகாலையில் சந்திரிகாவின் அச்சுறுத்தல் செய்தியுடன்தான் கலையும் போலை இருக்குது பாருங்கோ... ஆனால் பிரதமர் ரணிலும் ஒண்டுக்கும் அசையிற ஆளாத் தெரியேல்லை...ஐயாவுக்கு அந்நிய நாடுகளின் ஆதரவுப்பலம்.... அம்மையாருக்கு அயல்நாட்டின் ஆதரவுப்பலம்.... ஆனாலும் பலவீனமான நிலையில் சிறிலங்காவும் அதன் மக்களும்.... என்ன நான் சொல்லுறது பிழையே பாருங்கோ....?

**செய்தி** யுத்தத்தை ஒத்திப்போடும் உபாயமாக சமாதானப் பேச்சு உருப்பெற்றுள்ளது என்கிறார் ரவூப் ஹக்கீம்

மயிலர் :கொஞ்சநாளா 'ஹக்கீம்' சரியாத்தான் குழம்பிப்போயுள்ளார். என்ன சொன்னாலும் அதில் பிழை பிடிக்க அதாவுல்லா அணி ஆந்தையாய் முழிச்சுக் கொண்டிருக்குப் பாருங்கோ.... அது சரி நானாவிடம் ஒரு கேள்வி... யார் யுத்தத்தை ஒத்திப்போடும் உபாயமாக சமாதானப் பேச்சை உருவாக்கினம் எண்டு விளக்கம் தர முடியுமா? யுத்தத்தில் வெற்றி நிலையை நோக்கி முன்னேறுபவர் அதனை வெற்றிகரமாக முடிக்கவே விரும்புவர்...ஒத்திப் போடவல்ல.... நான் என்ன சொல்லுறன் எண்டு உங்களுக்கு விளங்கினாச் சரி... சமாதானத்திற்கான யுத்தம் என்று தத்துவம்பேசிய அம்மணியாரின் பக்கம் இருந்து வந்தவர்தானே...! இப்படித்தான் ஏதாவது தத்துவம் உளறுவார் பாருங்கோ....

**செய்தி** 'இராணுவ புலனாய்வுத்துறையால் ஆபத்திற்குள் சிக்கும் அரசாங்கம்' எச்சரிக்கிறார் திலக்மாரப்பன...

மயிலர் :உதென்ன பெரிய விசயம்... உயர்பாதுகாப்பு வலயக்குடியேற்றம் பற்றி அறிக்கை எழுதி அரசாங்கத்தை இக்கட்டுக்குள் மாட்டி விட்டு இப்ப ஆளை ஆள் குற்றம் சாட்டுகின்ற சிறிலங்காவின் முழு இராணுவ உயர் பீடங்களுமே அரசாங்கத்தைச் சிக்கலில்தான் மாட்டப் போகின்றதென்பதை மாரப்பன உணரவேண்டும் பாருங்கோ. அம்மணியின்ரை ஆளான இராணுவத் தளபதி அரசின் நலன்களுக்கு ஆதரவாக விசுவாசமாக செயற்படுவாரா என்பது சந்தேகம் தான் பாருங்கோ.. உதையும் மாரப்பன வேறு யாரையும் கொண்டு புலனாய்வு செய்தால் என்ன?

இரவு உணவு அருந்தாமல் உறங்கு; எவருக்கும் கடனாளியாய் இல்லாமல் துயிலெலு. -ஜார்ஜ் ஹெர்பெர்ட்.

வரலாறு

# யாழ்பாடிக்கு மணற்றிடரை பரிசளித்த மன்னன் யார்?
# முரண்பட்ட கருத்துக்களைத் தரும் மரபுக்கதைகள்

**திருஞானசம்பந்தரின்** (7ஆம் நூற்றாண்டு) திருப்பதிகங்களைத் தன் யாழில் வாசித்து மகிழ்வித்த திரு நீலகண்டர் மரபில் வந்த அந்தக் கவிவீரராகவன் என்னும் யாழ்பாடிக்கு மன்னன் ஒருவனால் பரிசாக அளிக்கப்பட்ட மணறறிடர் (மணற்றி மணலை மணற்றிடற்காடு என்றும் அழைக்கப்படும்) என்னும் பிரதேசமே பின்னர் யாழ்ப்பாணம் என்னும் பெயரைப் பெற்றது என மரபுக்கதைகள் ஒருமுகமாகக் கூறுகின்றன.

பரிசளித்த மன்னன் யார்? அவனின் இராசதானி எங்கே இருந்தது என்பதிலேயே முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. வட இலங்கைத் தமிழரின் வரலாற்றைக் கூறும் மிகப் பழைய நூலான (16ஆம் நூற்றாண்டு) வையா பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

"இராவணன் இறந்தபின் இலங்கை மன்னனாக இராமனால் முடிசூட்டப்பட்ட விபீஷணன் முன்னிலையில் யாழ்பாடி ஒருவன் யாழ்வாசித்து மகிழ்வித்ததற்குப் பரிசாகக் கிடைத்த இலங்கையின் வட கரையிலுள்ள மணற்றிடற் காட்டைத் திருத்தி நற்பயிர் செய்து சோலையாக்கி அங்கு மண்டபம் அமைத்தபின் தசரதன் மைத்துனன் குலக்கேதுவின் மகன் கோளுறு கரத்துக் குரிசிலைக் கூட்டிவந்து சக்கரவர்த்திப் பட்டம் சூட்டி அந்நாட்டுக்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு அதனை ஆளவைத்தான்"

அன்னது நிற்க விபீஷணன் தன்மு
னரிய யாழ் வாசினை புரிவோன்
மின்னுள் இலங்கை வடகடற் கரையில்
மேவிய மணற்றிடற் காட்டில்
தன்னிகர் பிறிதொன் றிலாத நல் வருக்கை
தாலிளம்பூகமாத்தெங்கு
கன்னலென் றுரைக்கும் பயிரினை இயற்றி
கற்பக தாருவென் றிசைத்தான்.
(வையாபாடல்12)


யாழ்ப்பாண வைபவமாலை பின்வரும் மரபுக்கதையைக் கூறுகின்றது.

"அக்காலத்தில் சோழநாட்டிலிருந்து இரண்டு கண்களும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கட நகரியிலிருந்து (சிங்கை நகர்) அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராஜன் பேரில் பிரபந்தம் பாடிக்கொண்டுபோய் யாழ்வாசித்துப் பாடினான். அரசன் அதைக்கேட்டு மிகுந்த சந்தோசம்கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடர் என்னும் நாட்டைக் கொடுத்தான் (யா. வைபமாலை குலசபாநாதன் பதிப்பு. 1953)

உக்கிர சிங்கனுக்குப் பின் அவன் மகன் ஜெயதுங்க வீரவராச சிங்கனும் சிங்கைநகரைத் தலைநகராக வைத்திருந்தான். இவன் காலத்திலே யாழ்ப்பாணன் வந்து இவனை இசையால் மகிழ்வித்தபோது நல்லூர்ப் பகுதியை யாழ்ப்பணனுக்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கலாம்.(ஜி. தனபாக்கியம். இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிட கலாசாரமும்) தன் குலமரபின் பெருமையை நினைவு கொள்ளும் வகையில் தான் அன்பளிப்பாகப் பெற்ற பரிவுக்கு யாழ்ப்பாணம் என்னும் பெயர் வைத்தான்.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஐராங்கணி டி இரத்வத்தை வாலகம்பாகு (வட்டகாமினி கி.மு. 89 - 77) என்னும் சிங்கள மன்னன் ஆட்சியில் தஞ்சாவூரைச் சேர்ந்த குருட்டு இசைவாணன் ஒருவன் அவனது அரசவைக்கு வந்து இசையினால் மகிழ்வித்தான். இம்மன்னன் வடபகுதியை அவனுக்கு அன்பளிப்பாக வழங்கினான். இப்பாணனின் பெயரால் அப்பகுதி யாழ்ப்பாணம் என அழைக்கப்பட்டது (History behind Jaffna Daily News Sep 6, 1986)

மணற்றிடர் பகுதியை பரிசளித்தவர் என விபீஷணன் வால சிங்கன், ஜெயதுங்க வீரராஜசிங்கன், வாலகம் பாகு என்னும் நான்கு மன்னனின் பெயர்கள் குறிப்பிடப்ப டுகின்றன. இவர்களுள் வாலசிங்கன், ஜெயதுங்க வீரராஜசிங்கன் என்னும் பெயர்கள் ஒருவரையே குறிக்கின்றன. அப்படியானால் மூன்று மன்னர் கள் பெயர்களை மரபுக் கதைகள் குறிப்பிடுகின்றன.



அடுத்தது மணற்றிடரைப் பரிசளித்த மன்னன் இலங்கையின் எந்த இடத்திலிருந்து ஆட்சிபுரிந்தான். விபீசணன் எனில் தற்போதைய இலங்கையின் தெற்கிலிருந்த கடல் கோளால் விழுங்கப்பட்ட இலங்காபுரியில் இருந்து ஆட்சிபுரிந்தான். அப்படியாயின் இலங்கை முழுவதையும் விபீஷணன் ஆண்டான வட இலங்கையினுள் மணற்றிடர் (யாழ்ப்பாணம்) வரை அவன் ஆட்சி பரந்திருந்ததா? என்னும் வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

முல்லைமணி

சிங்கை நகரில் இருந்து ஆட்சிபுரிந்த வாலசிங்கன் ஆயின் சிங்கை நகர் எங்கே இருந்தது என்னும் வினாவுக்கு விடைகாண வேண்டும். சிங்கை நகர் வல்லிபுரத்தில் இருந்தது என முதலியார் இராசநாயகம் கருதுகிறார். இவரின் கருத்தோடு உடன்படுகின்றார் சுவாமி ஞானப்பிரகாசரும். இதற்குச் சார்பாக வல்லிபுரத்தில் கிடைத்த தொல்லியல் சின்னங்களைச் சுட்டிக்காட்டி இச்சிங்கை நகரின் தோற்றம் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக இருக்கலாம் என்கிறார்.

ஆனால் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் யாழ்ப்பாண அரசு தோற்றம் பெற்றதெனக்கருதும் பேராசிரியர்கள் கா. இந்திரபாலா, சி. பத்மநாதன் என்போர் யாழ்ப்பாண அரசின் தலைநகர் நல்லூர், சிங்கை, நகர், யாழ்ப்பாணம் என வரலாற்றிலக்கியங்கள் கூறியபோது இவை எல்லாமே நல்லூரரையே குறிப்பிடுகின்றன என்கின்றனர்.

யாழ்ப்பாண வைபவமாலை உக்கிரசிங்கன் மாருதப்புர வல்லியைத் திருமணம் செய்தபின்னர் சில ஆண்டுகள் கதிரைமலையில் (கந்தரோடை) இருந்து அரசாண்டான் என்றும் பின்னர் தலைநகரைச் சிங்கை நகருக்கு மாற்றியதாகவும் கூறுகின்றது. இத்தலைநகர் மாற்றம் வன்னியில் ஏற்பட்டிருக்கலாம் என வையாபாடலை ஆதாரம் காட்டுகின்றார் திரு. ப. புஷ்பரட்ணம். "சிங்கை நகருக்கு வடக்காக உள்ள மணற்றிடரை (மணவை என்றும் அழைப்பார்) யாழ்ப்பாணனுக்கு வாலசிங்க மகாராஜா வழங்கினார் என்றால் சிங்கைநகர் யாழ்ப்பாணத்துக்குத் தெற்கில் தான் இருக்க வேண்டும். இங்கே யாழ்ப்பாணத்துக்குத் தெற்கே வன்னிப் பிராந்தியமே இருப்பது குறிப்பிடத்தக்கது" என்னும் கருத்தை முன் வைக்கிறார் அவர் இந்தக் கருத்து மேலும் ஆய்வுக் குரியது.

வல்லிபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த வால்சிங்கன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு பகுதியை (நல்லூர் அல்லது கரையூர்,பாசையூர்) யாழ்ப்பாணத்துக்கு பரிசளித்தானா என்பதும் ஆய்வுக்குரியது.

யாழ்ப்பாணனுக்கு மணற்றிடரைப் பரிசளித்த வால சிங்கனே அடங்காப்பற்றில் வன்னியர் குடியேற் றத்துக்கும் காரணமாக அமைந்தான் என இன்னொரு மரபுக்கதை கூறுகின்றது. இம்மரபுக்கதை வையாபாடலில் இடம் பெறுகிறது.

"செயதுங்க வீரவரராச சிங்கன் (வாலசிங்கன்) தன்மாமனது மகளைத் தான் மணம் முடிக்கவிரும்புவதாக மதுரை மன்னனிடம் அறிவிக்குமாறு தூதுவரை அனுப்பினான். தூதுவர்கள் சொன்னதைக் கேட்ட மதுரைமன்னன் (சிங்ககேது) அறுபது வாட்படை வன்னியரை அழைத்துத் தன் மகள் சமதூதியை அவர்களுடன் அனுப்பிவைத்தான். வரராசசிங்கனும் இளவரசியை மணம் முடித்து விட்டு அவளோடு வந்த வன்னியர்களை அடங்காப்பற்றுக்குச் சென்று அதைக் கைப்பற்றி ஆளுமாறும் ஆண்டுதோறும் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்த வேண்டும் என்றும் பணித்தான்.

"அடங்காப்பற்றை அடைந்ததும் வன்னியர் அதைக் கைப்பற்றுவதற்குத்தம்மிடம் போதியபடை இல்லை என்பதை உணர்ந்தார்கள். எனவே தொண்டைமண்டலத்துக்குத் தூதுவர்களை அனுப்பி மேலும் பலரை அழைப்பித்தார்கள். வன்னியர்கள் வந்தபின்னர் அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களுடன் அடங்காப்பற்றை வந்தடைந்தனர்.

வாலசிங்கன் தனக்குத் திறை செலுத்துக என்று கூறாது யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்தும்படி ஏன் கூறினான் என்பது சிந்திக்கத்தக்கது. அப்படியானால் வால சிங்கன் யாழ்ப்பாணத்துக்கு வெளியே அரசோச்சினான் எனக் கொள்ளவேண்டும். வாலசிங்கன் கண்டியில் இருந்து அரசாண்டான் என ஒரு குறிப்பும் உண்டு.

ஐராங்கனி டி இரத்வத்தை குறிப்பிடும் வாலகம்பாகு பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இதற்கான வரலாற்று மூலத்தை அவர் குறிப்பிட வில்லை. மரபுக் கதைகளில் இடம் பெறும் வாலசிங்கனையே இவர் வாலகம்பாகு என நோக்கினார் போலும்.

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களில் குடியேற்றம் நடைபெற்ற ஆண்டுகள் பற்றியும் வரலாற்றாசிரியர் மத்தியில் கருத்தொருமைப்பாடு இல்லை.

யாழ்ப்பாணக் குடியேற்றம் கலியுக ஆண்டு 3000 இதற்குச் சமமான கி.மு.101 ஆம் ஆண்டு எனவும் வலசிங்கன் காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஆகலாம் என்றும் வையாபாடலை ஆதாரம்காட்டி கலாநிதி க.செ. நடராசா நிர்ணயம் செய்கிறார். எனவே வன்னியர் இலங்கையில் குடியேறிய காலம் கி.மு. 50 ஆம் ஆண்டாகும்.

தற்கால ஆய்வாளர் சோழர்காலத்தை அண்டித் தான் வன்னியர் குடியேற்றம் ஏற்பட்டது. 9ஆம் நூற்றாண்டையடுத்துத்தான் . யாழ்ப்பாணத்தில் குடியேற்றம் ஏற்பட்டது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் ஏற்பட்டது என்கிறார்கள்.

வரலாறு வரன்முறை யாக எழுதப்படாத விடத்து மரபுக்கதையே வரலாற்று மூலங்களாகக் கொள்ள வேண்டும். அவற்றை வெறும் கட்டுக்கதைகள் என்று ஒதுக்கி விட முடியாது. அவற்றினுள் சில வரலாற்று நிகழ்ச்சிகள் மறைந்திருக்கின்றன. தொல்லியல், மானிடவியல் சான்றுகளின் அடிப்படையில் மரபுக்கதைகளில் பொதிந்திருக்கும் உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டியது வரலாற்றறிஞர் கடனாகும்.

---

பன்முகம் - 9

# தமிழ் மூளை

**பன்மொழிப்புலவர்** நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்குப் பின்னர் மொழியியல் ஆய்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் இன்னொரு பன்மொழி வித்தகரான தாவீது அடிகள். பன்மொழிகளினதும் சொற்களின் மூலவேரைத் தனிமனிதனாக ஆய்வு செய்து கொண்டிருந்தார். ஆயினும் அவர் மேற்கொண்டிருந்த பணி முழுமை அடையவுமில்லை, அவர் பணியை வேறுஎவரும் மேற்கொள்வதாகவும் தெரியவில்லை. அத்தனி மனிதனுடைய முயற்சி அவருடனேயே மறைந்துவிட்டது.

சுவாமி ஞானப்பிரகாசருடைய ஆய்வுகள் அடங்கிய அவரது கையெழுத்துப் பிரதிகள் சில தேடுவாரற்ற நிலையில் இருந்து பின்னர் காணாமற் போயின. அவை பேணிப்பாதுகாக்கப் படவில்லையென்று அவரது துறவற சபையைச் சேர்ந்த பன்மொழிப் புலவரான சுவாமி பாவிலுப்பிள்ளை அவர்கள் ஒருமுறை சொல்லிக் கவலைப்பட்டார்.

இத்துறையில் கவனம் செலுத்தக் கூடிய தகுதிவாய்ந்த கலாநிதிகள் சுயவிளம்பர விரும்பிகளாகவே உலகை வலம் வருகின்றனரே ஒழிய ஆரியம் போல் உலக வழக்கழிந்து போகாத தமிழை ஆய்வு செய்து அதன் பெருமையை உலகறியச் செய்ய சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி தாவீது அடிகள், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் போன்ற அறிஞர்களுக்குத் தட்டுப்பாடு வந்துவிட்டதே என்பதை எண்ணும் போது நெஞ்சு கனக்கவே செய்கின்றது.

1976 இல் சுதந்திரனில் யான் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் தந்தை செல்வாவின் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. இராஜேந்திரம் அவர்களின் நட்பு எனக்குக் கிட்டியது. அவர் தாவீது அடிகளின் நெருங்கிய நண்பரும் கூட. தாவீது அடி களின் பணியையும் அவரது நினைவாற்றல் பற்றியும் அவர் என்னுடன் வியந்து பேசியதுண்டு.

தாவீது அடிகளின் எழுத்திலும், பேச்சிலும் பலமொழிச் சொற்கள் கலந்திருக்கும். அவர் தனது ஆய்வுக் கட்டுரைகளை எழுதும்போது வரும் பிறமொழிச் சொற்களை அந்த அந்த மொழியிலேயே எழுதுவார்.

"இப்படி நீங்கள் எழுதினால் உங்களைத் தவிர வேறு எவராலும் உங்கள் கட்டுரைகளைப் படிக்க முடியாது" என்று மற்றவர்கள் கூறினால் "அதனால் என்ன ஒரு மொழியைப் படிப்பதற்கு மூன்று மாதங்கள் போதுமே." என்று அடிகள் கூறுவாராம்.

தாய்த் தமிழையே முழுமையாகக் கற்க முடியாத அரைகுறையான எம் போன்றவர்களுக்கு முப்பதுக்கும் அதிகமான மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற அடிகளாரின் கூற்று எப்படிப் பொருந்தும் என்பது ஒருபுறம் இருக்க அந்த அறிவின் சிகரத்தை அடுத்தவர்களால் இலகுவில் எட்டமுடியாது என்பது மட்டும் உண்மை.

ஒருமுறை யாழ்ப்பாணத்தில் அறிந்தவர் ஒருவரது வீட்டிற்கு அடிகளார் சென்றிருந்தாராம். அவரோடு கூடவே திரு.இராஜேந்திரமும் சென்றிருக்கின்றார். அதே வீட்டுக்கு அடிகளார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு முறைதான் சென்றிருக்கின்றார்.

வீட்டுக்காரர்களும் அவர்களை அன்போடு வரவேற்று உபசரித்து உரையாடிக்கொண்டிருந்த போது, அடிகளார் திடீரென்று கேட்டாராம் "சென்றமுறை நான் வந்திருந்த போது இந்த இடத்தில் ஒரு அடைப்பு போட்டிருந்தீர்களே அதை இப்போது அகற்றிவிட்டீர்களாக்கும்."

அடிகளாரின் இக்கூற்றைக் கேட்டு வீட்டுக்காரரே வாயடைத்துப் போனார்களாம். ஏனெனில் அந்த அடைப்பு விடயம் வீட்டுக்காரர்களே மறந்து போய் விட்டதென்று அங்கு நின்ற இளசுகளுக்கே தெரியாத விடயம். ஆனால் அந்த அற்பவிசயத்தைக் கூட அடிகளார் தன் மனத்திரையில் பதிவைத்திருக்கிறாரே என்பதுதான் ஆச்சரியம். அத்தனை ஞாபகசக்தி அவருக்கு.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது இன்னொரு சம்பவமும் என் நினைவுக்கு வருகின்றது. சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களின் மகன் தனது கல்வியை இடைநிறுத்திவிட்டு இலண்டன் சென்று ஆரம்பத்தில் விற்பனை நிறுவனம் ஒன்றில் காவலாளியாக வேலை செய்து கொண்டிருந்தாராம்.

ஒருநாள் விற்பனை முடிந்து நிறுவனம் மூடப்படும் வேளையில் நிறுவனத்தின் கணக்காளர் நீண்ட ஒரு கணக்குப்பட்டியலை வைத்து கணினி மூலம் கூட்டிக் கொண்டிருக்கின்றார். தற்செயலாக அவ்விடத்திற்குச் சென்ற சிரித்திரன் ஆசிரியரின் மகன் அந்த நீண்ட பட்டியலை சும்மா பார்வையிட்டு சில நிமிடத்தில் மனக்கணக்காகக் கூட்டி மொத்தத் தொகையை கூறியிருக்கின்றார்.

அந்த விடையைக் கேட்ட கணக்காளர் இவரை மேற்கண்ணால் ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் ஒரு பட்டன்களாக அழுத்தி எண்களையும் பதித்துக் கூட்டியிருக்கிறார். வந்தவிடை சற்று முன்னர் இவர் கூறிய அதேதொகை. உடனே அந்தக் கணக்காளர் தன் இருக்கையை விட்டெழுந்து கைகொடுத்துப் பாராட்டியிருக்கிறார். சில நாட்களில் காவலாளியாக இருந்த இவர் உள்ளுக்கு வேலைக்கு அமர்த்தப் பட்டார். ஈழத் தமிழ் மூளைகள் இலேசுப் பட்டவையா?

யாழ்ப்பாணத் தமிழர்களின் அறிவுப் பசிக்குத் தீனிபோட்டுக் கொண்டிருந்த அறிவாலயமாம் நூல்நிலையத்தை பேரினவாதச் [illegible]கள் 1-06-1981 அன்று தீக்கி[illegible]கினர். அந்த அறிவுக்களஞ்சிய[illegible] எரிந்து நீறாகும் காட்சியை தா[illegible] அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்[illegible]ம்பத்திரிசிரியர் கல்லூரி யின் மேல்மாடியில் இருந்து கண்ட தாவீது அடிகள் மாரடைப்பு வந்து அதே இடத்தில் இறந்து போனார்.அந்த அறி வுக் களஞ்சியம் அழிந்து போவதைக் கண்டு இந்த அறிவுக் களஞ்சியம் அழிந்துபோயிற்று.

வன்னி ஆய்வாளர் திரு. முல்லைமணி அவர்களின் கூற்றுப்படி வன்னியின் தமிழ் அறிஞராக வாழ்ந்த திரு.வ.சு. இராசஜயனார் அவர்களின் சொத்தான பதினையாயிரம் நூல்கள் அவரது மரணத்தின்பின் உறவினரால் யாழ். நூல் நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. அழிக்கப்பட்ட அறிவுச் செல்வங்களுள் அந்தப் பதினையாயிரம் நூல்களும் அடங்கும்.

நாவண்ணன்

# தேவை - தொடர்புக்கான வழிவகைகள்

**உலகம** சுருங்கி ஒரு கிராமமாகி விட்டதென்று சொல்கிறார்கள். இதுவரையிலான நிலைமைகள், வன்னியைப் பொறுத்தவரையில் அப்படியல்ல.

விரிந்திருந்த உலகத்தைச் சுருக்கி ஒரு கிராமமாக்கியது தொடர்புதான். தொடர்பாற்றான் சுருங்கியிருக்கிறது உலகம். அதாவது பௌதீக அமைப்பு மாறாமல், சுருங்காமல் தொடர்பால் எல்லாம் அருகருமாக இருப்பது போலச் சுருங்கியிருக்கிறது.

கடலாலும் சமுத்திரங்களாலும் மலைத் தொடர்களாலும் பிரிக்கப்பட்டிருந்த நாடுகள், எல்லைகளாலும் பிற விவகாரங்களாலும் பிரியுண்டிருக்கும் தேசங்கள் எல்லாம் தொடர்பால் தான் அருகருகாக இருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று உறவாடிக் கொண்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாகச் சுருங்கியிருக்கின்றன.


மனித வளர்ச்சியின் மிகப் பிரமாண்டமான பாய்ச்சல் தொடர்பு சாதனத்தின் கண்டுபிடிப்பின் பின்புதான் நிகழ்ந்தது. தொடர்புக்கான சாதனங்களைக் கண்டறியமுதலும் தொடர்பின் பயன்பாடிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்தளவுக்கு தொடர்பு அவசியமானது; முக்கிமானது.

தொடர்பின் அவசியத்தேவையே தொடர்புசாதனத்தைக் கண்டறியத் தூண்டியது. தொடர்புக்கான தீராத்தாகமும் இன்னும் விரிந்து செல்லும். அவசரத் தேவைகளும் தொடர்பு சாதனங்களின் புதியவளர்ச்சிகளையும் பெரும் பெருக்கத்தையும் கண்டிருக்கின்றன; இன்னும் கண்டு கொண்டிருக்கின்றன. இனியும் காணப்போகின்றன.

இன்று தொடர்பில்லையென்றால் வாழ்க்கையே இல்லை; மனித இயக்கமேயில்லை எனலாம். தொடர்பில்தான் எல்லாமே மையங்கொண்டிருக்கின்றன.

தொடர்பால் சுருங்கியிருக்கும் உலகம் சர்வதேசமயப்பட்டிருக்கிறது. தொடர்பின்றியிருப்பதென்பது துண்டாடப்பட்டிருப்பதற்குச் சமம். ஈழப்போரின் உச்சக்கட்ட நடவடிக்கையாகவும் தந்திரோபாயமாகவும் இதைத்தான் சிங்களத் தரப்புக் கடைப்பிடித்தது. தமிழர் தாயகத்தை வெவ்வேறாகத் துண்டாடி வைத்திருந்தது. அப்போது வன்னியிலிருந்து வவுனியாவுக்கோ யாழ்ப்பாணத்துக்கோ இலகுவில் போக முடியாது. அதுபோல வவுனியாவிலிருந்து மன்னாருக்கோ, திருமலை, மட்டக்களப்புக்கோ உடனே போகேலாது. இப்படித்தான் மன்னாரிலிருந்து பிற இடங்களுக்கும் இப்படியிப்படி தொடர்பைத் துண்டித்து ஒடுக்குமுறையை இறுக்கி வைத்திருந்தது.

தொடர்பின் வளர்ச்சி ஒடுக்குமுறையின் எதிரியாகவே பெரிதும்



இருக்கிறது. இதனை ஒடுக்குமுறையாளர்கள் நன்கறிந்தே செயற்படுகின்றனர். இதனால் அவர்கள் தமக்கேற்பத் தொடர்பை கையாளவும் முயற்சிக்கின்றனர். இதுபற்றி பின்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

தொடர்பு விடுதலைக்கான ஒரு வழியாகவே கூடுதலாக இருக்கிறது. நாம் அதனை அப்படிக் கையாளவும் வேண்டும் இதற்கு தொடர்புபற்றி அறிவும் புதிய சிந்தனையும் தேவை.

ஒடுக்கு முறையாளரால் ஒரு இடத்தில் நிகழ்த்தப்படும் படுகொலை தொடர்பான செய்திகளை அங்கே வலுவான தொடர்புக்கட்டமைப்பு இருக்குமானால் உடனடியாகவே முழு உலகத்திற்கும் அம்பலப்படுத்தி விடலாம். இதனால் சடுதியாகவே அது உலகின் கவனத்தை ஈர்த்து விடும். அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றும்விடும். இது அந்தப்படுகொலையை நிகழ்த்திய தரப்புக்கு நெருக்கடியைத்தந்துவிடும்.

இதேமாதிரி மக்களின் எழுச்சி நடவடிக்கைகளும் தொடர்பால் தான் வெளியுலகத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அது மட்டுமல்ல மக்கள் எழுச்சியடைவதற்கும் ஒன்றிணைவதற்கும் தொடர்பே பிரதானம்.

இதனாற்தான் தொடர்பைத் துண்டிப்பதில் ஒடுக்கு முறைக்கரங்கள் முன்னிற்கின்றன. தொடர்பை இல்லாதொழித்துவிட ஒடுக்குமுறை மூளைகள் பாடுபடுகின்றன.

இதற்கப்பால் வேறொரு தளத்தில் பார்த்தால் உற்பத்தியாளனையோ, நுகர்ச்சியாளனையோ, சந்தையாளனையோ இணைப்பதும் தொடர்பென்பதைக் காணலாம். அவர்களைப் பாதுகாப்பதும் தொடர்பில்தான். ஒரு உற்பத்திப்பொருளின் பெறுமானத்தை நினைத்தபடி வீழ்த்திவிட முடியாதளவுக்கு தொடர்பிருக்கிறது. அந்தப்பொருளை வெளியே அறிமுகப்படுத் துவதிலும் அப்பொருளுக்கான சந்தையை உருவாக்குவதிலும் அதற்கான நுகர்ச்சியாளரைத் தயார்ப்படுத்துவதிலும் குவிப்பதிலும் தொடர்புதான் பங்காற்றுகிறது.

இப்படித் தொடர்புகள் பலவகைப்படுகின்றன. பல் நிலைப்பட்டும் இயங்குகின்றன.

இதில் காற்றலைகளினூடான தொடர்பு அதிவேகமானது. மற்றது நேரடித் தொடர்பு. இரண்டிலும் பலவகைச் சாதனங்களின் பயன்பாடுகள் உண்டு. பல தன்மையுடைய தொழிற்பாடும் உண்டு.

தொடர்பு நேரத்தைமீதப்படுத்துகிறது. செலவைக்குறைக்கிறது. பணியை இலகுவாக்குகிறது. தேவையை விரைவாக நிறைவாக்குகிறது. அலைச்சலைத் தவிர்க்கிறது. மனித வளத்தை மிச்சப்படுத்துகிறது. எதையும் விரைவாக்குகிறது. சிரமங்களைக் குறைக்கிறது. அறிவைக் கூட்டுகிறது. எல்லாவற்றையும் ஒன்றிணைக்கிறது. எங்கும் மையமாகி நின்றியங்குகிறது.

தொடர்பில்லையென்றால் பலதும் இல்லை. யுத்தத்திலும் தொடர்புதேவை. சமாதானத்திலும் தொடர்புதேவை. பொருளாதார அபிவிருத்தியிலும் வாழ்க்கையின் மேம்பாட்டிலும் தொடர்பின் இயக்கம் அவசியம்.

இப்படியே தொடர்புபற்றி தொடர்ந்து சொல்லிக்கொண்டே போகலாம். இங்கே இப்போது நாம் சொல்லவிளைவது நமது சூழலுக்கும் இன்றைய நம்வாழ்வுக்கும் அத்தியாவசியமான சில அடிப்படைத் தேவைகளின் சில பகுதிக்குறிப்புகளை மட்டும்தான். அதுவும் மிகச்சுருக்கமாகவே.

(2)

வன்னியின் தொடர்பு நிலை மிக மட்டமாகவே இருக்கிறது. போரில் எல்லாமே அழியுண்டுபோயின. பல இல்லாமற் போய்விட்டன. சாதாரண தொலைத்தொடர்பே இன்னும் இல்லாதநிலைதான் தொடர்கிறது. வாகனம் மூலமான தொடர்புக்கும் மிகச்சிரமங்கள் பலவுண்டு. வழிகள் எதுவும் சீரில்லை தொலைதூரக் கிராமங்கள், சிறுபட்டி னங்கள், சிறுநகர்கள்.

இங்கிருந்து ஒருவர் கனடாவுடனோ, அவுஸ்ரேலியாவுடனோ, ஐரோப்பிய நாடுகளுடனோ , கொழும்புடனோ உடனடியாகத் தொடர்பு கொண்டுவிடலாம். ஆனால் மல்லாவியிலிருந்து ஸ்கந்தபுரத்துக்கோ, ஸ்கந்தபுரத்திலிருந்து புதுக்குடியிருப்புக்கோ, விஸ்வமடுவிலிருந்து மாங்குளத்துக்கோ என எந்த இடத்திலிருந்தும் இன்னொரு இடத்துக்குத் தொடர்பு கொள்வதாயின் அது மரண அலைச்சலாகவே இருக்கிறது.

நேரடித்தொடர்பை விட வேறு எந்தத் தொடர்பும் இல்லாமையால் பயணம் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. பயணத்துக்கு சீரான போதிய பயண ஒழுங்குகளோ நல்ல வழிகளோ இல்லை.

பாருங்கள் கொழும்பிலிருந்து தாய்லாந்துக்கோ அரபு நாடுகளுக்கோ போகும் நேரத்தைவிட கூடுதலான நேரம் தேவைப்படுகிறது புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்கோ ஸ்கந்தபுரத்துக்கோ புளியங்குளத்துக்கோ பளைக்கோ போய்ச் சேருவதற்கு.

இந்தநிலையில் வீண் மனித பலப்பிரயோகமும் செலவீனமும் அபிவிருத்தி முடங்கலும் தனிமைப்படலும் சந்தையிழப்பும், தகவலறியாமையும் சோர்வும், அலைச்சலும், வளர்ச்சியின்மையும் சிரமங்களும் மனநெருக்கடியும் எனப்பல பின்னடைவுக்காரணிகள் உருவாகின்றன.

நாம் புதிய வளர்ச்சியை நோக்கிப் பயணித்து எதிர்கால நடவடிக்கைகளுக்குத் தேவையான தயார்ப்படுத்தலுடன் இருப்பதற்குத் தொடர்பு முழுத்தேவையாகிறது. அதுவே நமது எதிர்காலத்தின் ஒளிக்கீற்றை தீர்மானிக்கவும் வல்லது.

வெளிவாசல் பாலன்

## சிந்திக்க வைத்த சந்திப்பு

### உயர்வு

**இப்போ** வைரஸ் காய்ச்சல் பற்றியே பயம் எல்லோர் மனதிலும். யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் சாகின்றார்களாம். கூடுதலாக யுவதிகளைத்தானாம் இந்த வைரஸ் தாக்குகின்றதாம்.

வைரஸ் யுவதிகள்மேல் தான் பாய்கிறது...? ஆய்வுகள் நடக்கிறதாம். பாவம் யுவதிகள்! உரும்பிராய்க்கிணற்றில் கிடந்த சிறுமியின் மர்மம் இன்னும் தெரியவில்லை. குமுழமுனையிலும் பத்தாம் வகுப்பு மாணவியை கிணற்றுக்குள்ளிருந்து மீட்டதாம்.

மர்மங்கள் என்பது பெண்களைச்சுற்றியே நிகழ்கிறது. நல்ல காலம் நான் ஆணாகப் பிறந்து விட்டேன் என்றாலும் எனக்குப்பயம் இந்த வைரசுக்கு.

இரவு முழுவதும் ஒரே காய்ச்சல். நித்திரை வரவில்லை - ஒரே மழை. மழையென்றாலும் விடிய மருந்து எடுக்க வேணும்.

நான்கு மணிக்கு அம்மா எழுப்பி விட்டா. நான்கு மணிக்கு ஆஸ்பத்திரிக்குப் போனால்தான் முன்னுக்கு நம்பர் எடுக்கலாம். அல்லது கியூ! பயந்து பயந்து போனேன்.

இப்ப நான் பயப்பிடுவது காய்ச்சலுக்கல்ல, இந்தக்கரண்டுக் கம்பிகளுக்கு - சில இடங்களில் தடிகளில் கரண்டுக்கம்பிகள் போகுது. சில இடங்களில் பதிஞ்சு தலைகளில் முட்டுறன் முட்டுறன் என்றிருக்குது, பச்சை மரங்களிலும் கம்பிகள் முட்டுகிறது, கரடிப் போக்குச் சந்தியில் கிடந்த கிழவர் போல கவனிப்பாரற்று இந்த மின் கம்பிகளும் செல்கின்றன. மழைக்கு எங்கை பாறிக்கிடக்குதோ தெரியாது.

"ஆண்டவரே...எனக்குக் கருணைகாட்டும்"

என்றபடி வைத்திய சாலை வாசலில் ஏறினேன் - பதினைந்து இருபது சனங்கள் வரும் நின்றனர். - எனக்குக் கிடைத்தது இருபத்தைந்தாவது நம்பர்.. எனது ரேண்வர பத்துமணியாகும் - ஒருமாதிரி பல்லைக்கடித்துக் கொண்டு நின்றேன்.

பத்துமணியாகியும் எனது முறை வரவில்லை. ஒரு நோயாளி சொன்னது எனதுகாதில் விழுந்தது.

"டொக்டர் சிலோ"

வைத்தியர் என்றால் நோயாளியிடம் மனம் விட்டுப் பேசவேணும் நோயாளர்கள் கூறும் நடப்புக்களைக்கேட்டு அவர்களின் உடலை, தேவை கருதி குருதிகளை பரிசோதனை செய்து மருத்துவமளிக்கவேணும். வைத்தியர் அனுசரிக்கின்ற முறையில்தான் நோயாளிகள் குணமடைகின்றார்கள்.

இது இங்கே சிலருக்குப் புரிவதில்லை.

சில வைத்தியர்கள் நோயாளிகளுடன் மனம் விட்டுக் கதைக்கமாட்டார்கள். நோயாளிகள் வருத்தங்களைச் சொல்லச் சொல்ல ஒரு துண்டில் குளிசைகளை எழுதுவார்கள். ஸ்தெதஸ் கோப் வைத்து நாடித்துடிப்புகளை அவதானிக்க மாட்டார்கள். சின்ன வருத்தம் தானே என்று அவர்கள் அப்படிச் செய்வதுண்டு.

இந்தச் சின்ன விடயம் தான் ஒரு நோயாளியை பெரிய வருத்தங்களுக்குள்ளாக்கும்.

எப்படி....?

அந்த நோயாளி வீடு செல்லும் வரை, மருந்துகள் உண்ணும்வரை, படுக்கும் வரை, உறங்கும் வரை யோசிப்பான்.

"என்னுடல் சோதிக்கப்படவில்லையே... இந்த மருந்துகளுக்கு வருத்தம் குணமடையுமா?" என்று.

இந்த யோசனையே அவனுக்குப் பெரிய வருத்தம்

"ஐயா தம்பி... என்னாலை எழும்பி நடக்கேலாதாம்! தலையை அமட்டுது. இந்த மருந்துகளை ஒருக்கால் வாங்கித்தாமோனை..."

துண்டைத் தந்து விட்டு அப்படியே அந்தக்கட்டிலில் அந்தத் தாய் சரிந்து விட்டாள். மருந்துக் கலவையாளரிடம் துண்டை நீட்டினேன்.

"இது காலையும் மாலையும் ஒவ்வொண்டு - இது ஆறுமணித்தியாலத்துக் கொண்டு. இது காய்ச்சல் காய்ஞ்சால் மட்டும் இரண்டு"

பக்குவமாய் சொல்லி பக்குவமாகவே மடித்துத் தந்தாள். பிரித்துப்பார்த்தேன் எல்லாம் ஒரேமாதிரியாகவே இருந்தது (?) பக்குவமாய் ஒரே கடதாசியில் தானே எல்லாவற்றையும் போட்டுத் தந்தாள். எவரும் பார்க்கக் கூடாதென்றோ...

"மிஸ்... எல்லாம் ஒரே மாதிரியா இருக்கு - எதெதெண்டு விளங்கேல்லை. எழுதிவிடுங்கோ..."

நீட்டினன்-அவள் சிரித்தாள் - அவளைப்பார்த்து அருகில் இருந்தவள் சிரித்தாள். எனக்கு N.S. கிருஸ்ணனின் "சிரிப்பு..." என்ற பாடல்தான் ஞாபகத்தில் வந்தது - எந்தச் சிரிப்புக்குள் இவளின் சிரிப்பு எந்த ரகம்?

நாங்கள் நோயாளிகள்! நோயாளர்கள் அனைவரும் படித்தவர்கள் அல்ல! எழுதித்தந்ததசரையை நான் அம்மாவின் கைகளில் வைத்தேன். எனது முறை வந்தது.

அவர் ஒரு வயது போன டொக்டர்.

எனக்கு முன்னுக்கு சென்றவர்களில் பலர் உள்ளுக்கே நின்றார்கள். அவர் அனைவரையும் மறித்து வைத்திருந்தார். எனக்கு ஏன் என்பதொன்றும் தெரியவில்லை.

"தம்பியவை எல்லாரும் கவனியுங்கோ... சுத்தம் தான் சுகம் தரும். நீங்கள் ஒவருதரும் நிகங்கள் வெட்டேல்லை. நிகங்களில் எவளவு அழுக்குகள் இருக்கிறது. அழுக்குகள் தானே கிருமிகளை உற்பத்தியாக்குகிறது.

ஒவரு நாளும் சுட்டாறிய தண்ணீரைப் பாவியுங்கள். நுளம்புகள் வளர வீட்டுக்குப் பக்கத்தில் குப்பை களைக் கொட்டாதீர்கள். மூடிவைத்த உணவுகளையே சாப்பிடுங்கள். நீங்கள் இப்படி நடந்தால் உங்க ளுக்கு வருத்தமே வராது."

என்று கூறி முடிக்குமுன் ஒரு நாற்பது வயது மதிக்கத் தக்கவர் பள்ளிமாணவன் ஒருவனைக் கூட்டிவந்தார். அந்தமாணவன் கண்களைப் பொத்தியிருந்தான்.

"ஐயா - படிக்கிற பெடியன் கல்லாலை எறிந்தவனாம் - கண்சிவந்து போச்சு" என்றார்.

டொக்டர் கண்ணைத் திறந்து பார்த்தார். ரத்தமாயிருந்தது.

"அந்தப்பிள்ளை எறியேக்கை பட்டுப்போட்டுது போலை"

டொக்டர் சொன்னார்.

"இல்லை ஐயா அந்தப் பெடியன் நேற்றும் ஆருக்கோ எறிந்தவனாம். தாய்க்குச் சொன்னனான் - தாய் பெடியனுக்கு அடிச்சவா" - இது நாற்பது வயதுக்காரர்.

"தற் இஸ் ஏ றோங் மெதேட். பிள்ளைக்கு அடிக்கிறது மடைமைத்தனம். எறிந்ததாலை ஏற்படுகிற விளைவுகளைச் சொல்ல வேணும் - எவர் தவறு செய்தாலும் அதை அன்பால்தான் திருத்த வேணும். எங்கே அந்தப் பிள்ளையின் வீடு - நான் போய் அந்தப் பிள்ளையைச் சந்திக்கிறன்."

என்றார் டொக்டர். அந்த வைத்தியசாலையில் அந்த டொக்டர் அப்படித்தானாம். அந்த டொக்டர் அந்த வைத்திய சாலையில் இருப்பதனால் - அவரால், அந்த வைத்திய சாலையும் உயர்கிறது.

எரிசரன்

அழமுடியவில்லை என்னால் , ஆனால் என் இதயம் இரத்தம் கசிகிறது. -வில்லியம் சேக்ஸ்பியர்.



# தீ சுமந்த நிலம்

## சத்ஜெய எதிர்ச்சமர்

சித்திரக்கதை – 06

ராகவன்






# குதூகலம்

### பத்திரப்படுத்திய குண்டூசி



காந்தீஜி ஒரு தடவை கப்பலில் பயணித்துக்கொண்டிருந்தபோது வெள்ளைக்காரர் ஒருவர் காந்தீஜியைப்பற்றி ஒரு கவிதை எழுதி அவரிடம் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார். காந்தீஜியைப்பற்றி நிறையக் குறைகூறி எழுதப்பட்ட கவிதை அது. காகிதத்தைக் கையில் வாங்கிய காந்தீஜி அதில்குத்தப்பட்டிருந்த குண்டூசியை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். "ஏன் சும்மா இருக்கிறீர்கள்? கவிதையைப் படியுங்கள்" என்ற ஆங்கிலேயருக்கு காந்தீஜி அமைதியாகக் கூறிய பதில் " முக்கியமான விசயத்தை (குண்டூசி) நான் முன்பே எடுத்துப் பத்திரப் படுத்திவிட்டேன்" ஆங்கிலேயர் முகத்தில் ஈயாடவில்லை.

### பேராசை



ஆங்கில தத்துவரான பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் பிரபுவிடம் "ஒருவர் இரு மனைவியரை மணந்து கொண்டால் அதிகப்பட்ட தண்டனை என்ன கிடைக்கும்?" என்று கேட்டார். சற்றும் தயங்காமல் ரஸ்ஸல் கூறினார் "இரண்டு மாமிமார்கள் கிடைப்பார்கள்" என்று.

### 200 வயதா....



நடைபாதையில் மூலிகை வேர்களை வைத்து மருந்து விற்றுக்கொண்டிருந்தவர் கூறினார் "என்னைப் பாருங்கள் இந்த மருந்தைச்சாப்பிட்டுத்தான் இப்போது 200 வயதைத் தாண்டியிருக்கிறேன்"

கேட்டுக்கொண்டு நின்றவர்களில் ஒருவருக்கு நம்பிக்கையில்லாமல் அந்த மனிதரின் உதவியாளரிடம் கேட்டார் உண்மையிலேயே இவருக்கு 200 வயதா?" என்று. அந்த இளைஞன் "எனக்கு எப்படித் தெரியும்? 120 ஆண்டுகளாகத்தானே இவருடன் வேலை செய்கிறேன்" என்றார்.

### தாயும்மகனும்....



தாயும் மகனும் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர். "பிரார்த்தனையின் போது கண்திறக்கக் கூடாது என்று எத்தனை தடவை உனக்குச் சொல்லுவது? என்று கேட்டாள் தாய். மகன் கேட்டான் " நான் கண்களை அடிக்கடி திறக்கிறேன் என்று உனக்கு எப்படித்தெரிந்தது?"

கண்ணீருக்கும் அப்பாற்பட்டு ஆழமாகப் பதிந்துள்ளன, சிந்தனைகள். –வில்லியம் வோட்டர்ஸ் வொர்த்.

# நேர்நோக்கு

## சிதைவடையும் நம்பிக்கைகள்

சிறீலங்கா சுதந்திரம் பெற்று 55 ஆண்டுகள் கடந்துவிட்டன கடந்த செவ்வாய்க்கிழமை நீண்டகாலத் துக்குப்பின் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் சிறிலங்கா 55வது சுதந்திரத்தைக் கொண்டாடியது. இவ்வேளையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடவென சந்திரிகா குமாரதுங்க ஆட்சி திட்டமிட்டிருந்த சுதந்திரப் பொன்விழாவுக்கும் 55வது சுதந்திரத்தினத்துக்கு மிடையேயான வேறுபாடு தெளிவாகவே தெரிந்தது.

சுதந்திரப் பொன்விழாவை அப்பொழுது புனிதத்தலமாகிய தலதாமாளிகையில் கொண்டாட சந்திரிகா அரசுதிட்டமிட்டிருந்தது. அந்த விழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து யாழ் கண்டிவீதி வழியாகப் பேருந்து விடப்போவதாக அவரது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் சூளுரைத்திருந்தார். ஆனால் தலதாமாளிகையில் விழா எடுக்கவும் முடியவில்லை. யாழ்-கண்டி வீதியால் பேருந்து விடவும் முடியவில்லை.

சிறிலங்கா இனத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் தமிழ் மக்களின் சுதந்திரத்தைப் பறித்து எவ்வகையிலேனும் அவர்களை அழித்துவிட அல்லது அடிமை கொள்ள அன்றைய பொ.ஐ.மு அரசாங்கம் எடுத்த முயற்சி அமைதியான முறையில் தமது சுதந்திரப் பொன்விழாவை கொண்டாட முடியாத நிலையை ஏற்படுத்தியது.

ஆனால் இம்முறை சமாதான வழிமுறையில் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டிய உரிமைகள் குறித்த பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 55வது சுதந்திரதினம் அமைதியான முறையில் நடந்தேறியிருக்கிறது. அதே வேளை கண்டி-யாழ் வீதிவழியான பயணமானது சாத்தியமான ஒரு விடயமாக மாறியிருக்கிறது.

எனினும் இம்முறையும் அன்றைய தினத்தைத் தமிழ் மக்கள் தமது சுதந்திரதினமாகக் கொண்டாடும் சூழ்நிலை ஏற்படவில்லை என்பதை அவர்களே வெளிப்படுத்தியிருக்கின்றனர். தென்பகுதி மக்கள் இன்று ஏற்பட்டுள்ள அமைதியின் பலன்களை அனுபவிக்கத் தொடங்கி விட்டனர். தென்பகுதியிலிருந்த சோதனைச் சாவடிகள் , காவலரண்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. தென்பகுதியில் உள்ள எவரது வீடும் படையினரின் ஆக்கிரமிப்பில் இல்லை. விவசாயச் செய்கை, மீன்பிடி, தொழில் முயற்சி எவற்றுக்குமே தடையில்லை.

சிறிலங்காவின் பொருளாதாரம் புத்துயிர்பெறத் தொடங்கியிருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உல்லாசப்பயணிகளின் வருகை , துறைமுகங்களுக்கு கப்பல்களின் வருகை என இயல்புநிலை அங்கு தோன்றிவிட்டது என அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் இந்தச் சமாதானத்தின் பயனைத் தமிழ் மக்கள் அனுபவிக்கத் தொடங்கவில்லை. மக்களின் குடியிருப்புக்கள் பல இன்னமும் ஆக்கிரமிப்பிலேயே இருக்கின்றன. விளைநிலங்கள் பல தரிசாகவே கிடக்கின்றது. மீன்பிடித் தொழிலுக்கு பல இடங்களில் தடை. அனுமதிக்கப்படும் இடங்களிலும் பல்வேறு சிரமங்கள், நிபந்தனைகள். தொழிற்சாலைகள் அதியுயர் பாதுகாப்பு வலையங்களுக்குள் சிக்கிக் கொண்டுள்ளன. பல பாடசாலைகள் இன்னும் இயங்காமலேயே உள்ளன. இராணுவம் ஆக்கிரமித்துள்ள இடங்களில் தமது சொந்தக்காணிகளுக்குக் கூட மக்கள் சுதந்திரமாகச் செல்ல முடியாதநிலை. இன்னும் பல அகதி முகாம்களில் மக்களின் துயரவாழ்க்கை தொடர்கிறது.

இவ்வாறான நிலையில் கடந்த 54 வருடங்களைப் போலவே தமிழ் மக்கள் இம்முறையும் தமது சுதந்திர தினம் எனக்கூறிவிடத் தயாராக இருக்கவில்லை.

எனவே சமாதானச் சூழ்நிலை ஒன்று உருவாகிவிட்டது உண்மையாயினும் இது நீடித்த சமாதானமாக மாற இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்வது மட்டுமல்ல அதனை உருவாக்கத் தீவிரமாகவும் இதயசுத்தியுடனும் செயற்படவேண்டும்.

இதற்குத் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு திடமான துணிச்சலான அரசியல் முடிவுகளை எடுக்க அரசாங்கம் தயாராக வேண்டும். தமிழ் மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது ஆரம்பத்தில் வைத்திருந்த நம்பிக்கை படிப்படியாகச் சிதைந்துகொண்டு செல்வது நிரந்தர நீடித்த சமாதானம் உருவாக ஒருபோதும் பயன்படாது. இந்நிலை தொடருமாயின் சிதைந்து போன நம்பிக்கைகளைச் சீர்செய்வதற்கே மிகப்பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டிவரும்.

**வேலவன்**

2ம் பக்கத் தொடர்ச்சி..

மேலும் மேலும் செய்து வந்தனர்.

ஆனால் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நடந்த பல சிறுவர் படுகொலைகள் சனாதிபதி சந்திரிகாவின் காலத்திலேயே நடைபெற்றன என்பது கடந்த காலத்தின் பதிவுகள்.

நாகர்கோவில், பாடசாலை மீது விமானம் மூலம் குண்டுவீசி பல சிறுவர்களையும் மடுதேவாலயத்தில் எறிகணை மூலம் பல சிறுவர்களையும் இவற்றையும்விட பல சந்ததர்பங்களில் நூற்றுக் கணக்கான பல சிறுவர்கள் பலியாவதற்கு காரணமாக விருந்தவர்களும் இவர்களே.

ஆனால் தமது ஆட்சியின் போது சிறுவர்கள் போரால் பாதிக்கப்பட்டதை மறைப்பதற்காக கடும் பிரயத்தனங்களையும் விசமத்தனமான பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வந்தனர்.

இவை யாவற்றையும் தவிடுபொடியாக்கும் படியாக யுனிசெப் பணிப்பாளர் பெலாமி அவர்களின் விஜயம் அமைந்து விட்டது.

சிறுவர்கள் தொடர்பாக புலிகள் மீது எவ்வளவு பிரச்சாரங்களை மேற்கொண்டாலும் பெலாமி அவர்கள் வன்னியில் தனது அவதானிப்பின் போது அவை யதார்த்தத்திற்கு புறம்பாக இருந்தமையை அவதானிக்கத் தவறவில்லை.

இதனையே பெலாமி அவர்கள் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது மிகத் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

அதாவது "சிறுவர் தொடர்பான கல்வி விடயங்கள் உட்பட சிறுவர் நலனைப் பேணுவதில் விடுதலைப்புலிகள் காட்டிவரும் அக்கறை திருப்தியாகவுள்ளது" எனத் தெரிவித்தமை கவ ளிக்கத்தக்கது.

இது புலிகள் சிறுவர் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடும் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களும் அவருக்குத் திருப்தி அளித்ததன் வெளிப்பாடேயாகும்.

மேலும் புலிகள் சர்வதேச இணக்கத்துக்கு அமைவாக செயற்படுவதில் உறுதியாகவுள்ளனர் என்பதை பெலாமி அவர்களிற்கு தெளிவுபடுத்தியதன் மூலம் சிறுவா நலனை மேம்படுத்தும் வகையில் சிறுவர் நலன் கருதி யுனிசெப்பிடம் புலிகள் முன் வைத்துள்ள திட்டமும் புலிகள் சிறுவர்களின் உரிமைகளும் சிறுவர் நல மேம்பாட்டைடிலும் கொண்டுள்ள அக்கறையை தெளிவுபடுத்தியிருக்கும்.


புலிகளோடு இணைந்து யுனிசெப் சிறுவர் நலன் திட்டம் ஒன்றை கூட்டாக மேற்கொள்வதற்கு இனங்கியிருப்பதும் புலிகளிற்கு அரசியல் ரீதியாக கிடைத்த வெற்றி ஒன்றேயாகும்.

ஏனெனில் இன்று உலகில் அதிகமாகப் பேசப்படும் விடயங்களில் ஒன்று சிறுவர் உரிமைப்பற்றியதுமாகும்.

இன்னொரு புறத்தில் யுனிசெப் - புலிகளோடு கூட்டாக இணைந்து செயற்படுவதற்கு இணங்கியிருப்பது யார் புலிகளிற்கு எதிராக சிறுவர் களைக் கொண்டு பிரச்சாரங்களை மேற்கொண் டார்களோ அவர் களிற்கு மிகப்பெரிய தோழ்வியுமாகும்.

இதனையே பெலாமியிடம் ஊடகவியலாளர்கள் கொழும்பில் வைத்து தொடுத்த விசமத்தனமான கேள்விகளிற்கு தகுந்த பதிலடி கொடுத்தமையும் சில கேள்விகளை அடியோடு நிராகரித்தமையுமாகும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 05



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 05

.................................................
.................................................
.................................................
.................................................

பெயர் :.................................................
முகவரி :.................................................
:.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 04



பரிசுக்குரியவர்
பூ. நளாயினி
உலகளந்த பிள்ளையார் கோயில்
1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

ஆம்! இவர்ஈழத்து விக்கிரமாதித்தன்!
இவர் சிம்மாசனத்துப் படிகள் ஒவ்வொன்றும்
ஒவ்வொரு கதையைச்சொல்லா! தாம் சுற்றிவந்த
ஓராயிரம் தமிழர் கதையைச் சொல்லுமோ!

அறுபதை அண்டியும் அயராது உழைக்கும்
ஐயாவே உடன்படிக்கை வந்தும் ஊருக்குப் போகலையா
பாதுகாப்பு வலயமா உனதூர் - பத்திரிகையில்
படை விலகல் பற்றியேதும் வந்ததாவென பார்க்கிறீரோ.

ந. புரட்சி மாறன்,
தமிழீழம்.

துட்டர்களின் துன்புறுத்தலினால்...!
ஒட்டு வேலை உன் தொழிலானதோ!
கவலையை விட்டு விடு மனிதா! - உன்
கனவு போல புதுவாழ்வு பிறக்கும் ஒரு நாள்.

லோ. பிரதீபன்,
இல.196/2 திருவையாறு,
கிளிநொச்சி.

ஊரிழந்து தொழிலிழந்து ஏதிலியாய்
வேற்றூரில் ஒட்டகம் அமைத்து
பாதுகாப்பு வலயங்களிலிருந்து பாதகர்
நீங்கும் காலத்திற்காய் காத்திருப்பாரோ.

இ.பிரகலாதன்,
8ம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.

வாரங்கள் பல கடந்தும் ஏன் இன்னும்
வாகனங்கள் வரவில்லை இவன் கடைக்கு?
என்ன செய்தி எனப்பார்க்கிறான்
எல்லாம் இப்போ புதியனவாம் ஊர்களிலே.

வீ.கலையரசன்
தமிழீழம்

சுற்றுக்கதிரையில் இருந்து உமக்கு
சுழலும் ரயர்கள் ஆசனமானதோ,
பழையது மீண்டும் வருமென்றா
பத்திரிகையைப் பார்க்கிறீர்.

இ.ராஜ்குமார்
2004கலைA,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

இருக்க ஒரு இருக்கையில்லை - ஆனால்
படிக்க ஒரு பத்திரிகையுண்டு
திருத்த ஒரு வாகனமில்லை - ஆனால்
திறன் மிக்க அறிவு (மனம்) உண்டு.

சி.குகா,
இல.302,
ஸ்கந்தபுரம்.

மனிதரின் கண்ணீரில்தான்,மண்டிநிற்கும் கவிதை எத்துணை. -ஹென்ரிஸ் ஹைனே.




28.01.2003 அன்று கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவு சந்தியில் திறந்து வைக்கப்பட்ட நினைவுத் தூபி மேலே. 1987 .01.28 அன்று கொக்கட்டிச் சோலை இறால் பண்ணையில் படுகொலை செய்யப்பட்ட 85 பேரின் நினைவாகவும் 1997 மகிழடித்தீவு சந்தியில் படுகொலை செய்யப்பட்ட 57 பேரின் நினைவாகவும் இவ் நினைவுத் தூபி திறக்கப்பட்டது.

முதலாவது பறப்பை 1981ல் மேற் கொண்ட கொலம்பியா விண்ணோடம் இறுதிப் பறப்பிற்கு தயாராகிய போது





கொலம்பியா விண்ணோடத்தின் முன் பகுதியின் படம் கீழே. இப்பகுதியிலேயே விண்வெளிவீரர்கள் அமர்ந்து பயணிப்பர்.






முதற்பயனத்தை மேற்கொள்ளும் இஸ்ரேலிய வீரருடன் இந்திய வம்சாவளி அமெரிக்கரான கல்பனா சாவ்லாவும் சக விண் வீரர்களும் பூமிக்கு திரும்பும் களிப்பில்

திரும்பும் வழியில் வெடித்துச் சிதறிய விண்ணோடத்தின் சிதறல்கள் அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநில பகுதிகளில் வீழ்ந்து கிடக்கின்றன






விண் ஓடவிபத்தில் இறந்து போன வீரர்களுக்கு துக்கம் தெரிவிப்பதற் காக வெள்ளை மாளிகையில் அமெரிக்க தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறப்பதையும் அதை சோகமுடன் ஒரு அமெரிக்க பெண்மணி பார்த்து நிற்பதையும் காணலாம்.

இறந்து போன வீரர்களுக்கு பொது மக்கள் வீதிகளில் பூச் செண்டுகளும் மலர் வளையங்களும் வைத்து தங்களுடைய இறுதி மரியாதையினை செலுத்துவதை காணலாம்.







சிதறல் களை தேடி அமெரிக்காவின் உள்ளக புலனாய்வுத் துறையினர் (FBI) பணியில் ஈடுபடுகின்றனர். விழுந்த சிதறல் களை பல இடங்களில் மக்கள் எடுத்துச் சென்று மறைத்து வைக்கின்றனர்.

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.